**கவனிக்க.**-2020.09.04 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2193 - 2020 සැප්තැම්බර් මස 11 වැනි සිකුරාදා - 2020.09.11

*2193 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1108 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1111 |


**கவனிக்க.**- (i) அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தச் சட்டமூலம் 2020, ஓகத்து 28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தம்) சட்டமூலம் 2020, செத்தெம்பர் 04 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(iii) நிதி (திருத்தம்) சட்டமூலம் 2020, செத்தெம்பர் 04 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(iv) துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு (திருத்தம்) சட்டமூலம் 2020, செத்தெம்பர் 04 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(v) நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தம்) சட்டமூலம் 2020, செத்தெம்பர் 04 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான
### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாகத் தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2020, ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 08,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1105 - B 82057-5,403 (2020/ 09)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலுவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.*

***3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :***

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

***4. பணிக்கமர்த்தும் நியதிகள் :***

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

***6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :***

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.*

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.*

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கைப் பொலிஸ் சேமப்படை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் (தலைமை மருந்துவ உத்தியோகத்தர் ) பதவிக்கு அரச மருத்துவ உத்தியோகத்தர்களை இரண்டாம் நிலைப்படுத்தல்

பொலிஸ் மருத்துவ சேவைப் பிரிவில் காணப்படும் மேற்குறித்த மருத்துவ உத்தியோகத்தர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக தற்போது அரசாங்க சேவையிலுள்ள வைத்தியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. தகைமைகளைப் பூர்த்தி செய்தவர்கள் பின்வரும் படிவத்திற்கமைய 11x8 அங்குலமுடைய தாளில் விண்ணப்பப்படிவத்தை தயாரித்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்படிவத்தை உரிய சான்றிதழ் பிரதிகளோடு அனுப்பி வைக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கைப் பொலிஸ் சேமப்படை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமை மருத்துவ உத்தியோகத்தர் பதவி" என்று குறிப்பிட்டு அமைச்சின் செயலாளர் ஊடாக 2020.10.09 ஆந் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் படி, "பணிப்பாளர், ஆட்சேர்ப்பு இலக்கம் 375, ஸ்ரீ சம்புத்த ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். அத் திகதிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். எந்தவொரு காரணத்திற்காகவும் விண்ணப்பப்படிவங்களை எந்த ஒரு உத்தியோகத்தரிடமும் தனிப்பட்ட முறையில் ஒப்படைத்தலாகாது.

03. **தகைமைகள்.-**

(i) வயது 40 இற்குக் குறையாமலும் 50 இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ii) கல்வி மற்றும் தொழில் தகைமைகள்.-

(அ) எம்.பீ.பீ.எஸ். (இலங்கை) அல்லது இலங்கை மருத்துவச் சபையால் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற எந்தவொரு பல்கலைக்கழகத்தினாலும் வழங்கப்படுகின்ற எம்.பீ.பீ.எஸ். அல்லது அதற்குச் சமமான மருத்துவப் பட்டத்துடன் இலங்கை மருத்துவச் சபையின் நிரந்தர மற்றும் முழுமையான பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) பட்டப்பின் படிப்பு டிப்ளோமா முதலாம் வகுப்பு வைத்தியராக இருத்தல் வேண்டும். மருத்துவ நிருவாகம் சம்பந்தமாக எம்.எஸ்.சி. பட்டம் பெற்றிருப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(iii) சேவை அனுபவம்.- மருத்துவ நிருவாகம் சம்பந்தமாக ஆதார வைத்தியசாலை அல்லது அதன் மேல் உள்ள நிருவனத்தில் நிருவாக பொறுப்பு உத்தியோகத்தராக 03 வருடத்திற்குக் குறையாமல் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

04. **சம்பளம் மற்றும் வேறு கொடுப்பனவுகளும் வசதிகளும்.-**

(அ) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு சுகாதார சேவை திணைக்களத்தினால் செலுத்தப்படுகின்ற தரத்துக்குரிய சம்பளம் மற்றும் சம்பளவேற்றத்துடன் அனைத்து கொடுப்பனவுகளையும் பெற்றுக் கொள்வதற்கு உரிமை உண்டு என்பதோடு இலங்கை பொலிஸினால் மீள் அளிப்பு செய்யப்படும் அதற்கு மேலதிகமாக அவருக்கு பொலிஸ் சேமப்படையில் முனைப்பான சேவையில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்களுக்குக் கிடைக்கும் சிறப்புரிமைகளுக்கான உரிமைகள் உண்டு.

(ஆ) சாரதியுடன் உத்தியோகபூர்வ வாகனமொன்றை சேவையின் தேவைப்பாட்டிற்கமையப் பெறுவதற்கு உரிமையுண்டு.

(இ) வைத்தியசாலைச் சுற்றாடலில் திருமணமானவர்களுக்கான அரசாங்க குடியிருப்புகள் வழங்கப்படும்.

05. விண்ணப்பதாரிகள் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை (மூலப் பிரதிகளை அனுப்பத் தேவையில்லை) மாதிரிப் படிவத்திற்கமைவாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

I. பிறப்புச் சான்றிதழ்
II. கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்கள்
III. ஏனைய தொழிற் தகைமைகளுக்கான சான்றிதழ்கள்
IV. விசேட தொழில் அனுபவத்தைக் குறிக்கின்ற சான்றிதழ்கள்
V. சேவையை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள்

06. விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

07. தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் நியமனத்தைப் பெறுவதற்கு முன் பின்னணி சோதனையொன்றில் தேர்ச்சியடைய வேண்டும் என்பதோடு பொலிஸ் சேவைக்கு ஏற்ற தேகாரோக்கியம் கொண்டவராக இருத்தல் வேண்டும். தகுதியற்ற விண்ணப்பதாரிகள் நிராகரிக்கப்படுவர்.

08. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான விதிமுறைகள்.-**

(அ) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் இலங்கைப் பொலிஸ் சேமப்படையின் சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கமைய சேமப்படை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்/ சேமப்படை சிரேஷ்ட பெண் பொலிஸ் அத்தியட்சகர் பதவியில் பெயரளவில் முனைப்பான சேவையில் நியமிக்கப்படுவார்கள்.

(ஆ) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு தற்போது சுகாதார சேவைத் திணைக்களத்தில் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களின் குறித்த சேவை மூப்பு மற்றும் சம்பளவேற்றம் தொடர்ந்தும் செல்லுபடியாகும்.

09. **சேவை நிபந்தனைகள்:-**

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பொது நிபந்தனைகளுக்குப் புறம்பான நிபந்தனைகள் -

(அ) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் அரசகரும மொழிக்கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக தற்போது தொகுக்கப்பட்டுள்ள அல்லது எதிர்காலத்தில் தொகுக்கப்படும் சுற்றறிக்கை கட்டளைகளுக்கமைய செயற்பட வேண்டும்.

(ஆ) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புக்கமைய மற்றும் பொலிஸ் மா அதிபர் சுற்றறிக்கை 1693/2003 மற்றும் 1804/2004 இற்கு அமைய பொலிஸ் நெறிமுறைக் கோவைக்கமைவாக செயற்படுவேன் என்று உறுதிமொழிதல் /சத்தியப் பிரமாணம் செய்தல் வேண்டும்.

(இ) அனைத்து விண்ணப்பதாரிகளும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறைவிதிகளில் காட்டப்பட்டுள்ள பொது நிபந்தனைகள், தாபன விதிக்கோவையில் முதலாம் மற்றும் இரண்டாம் தொகுதி ஏற்பாடுகள் மற்றும் அதற்குப் புறம்பான சுற்றறிக்கைகள் மற்றும் நிபந்தனைகள் பொலிஸ் சேவையின் கட்டளைகள், பொலிஸ் மா அதிபர் சுற்றறிக்கைகள் , பொது நிர்வாக சுற்றறிக்கைகள் மற்றும் நிதி ஒழுங்கு விதி ஏற்பாடுகளுக்குட் கட்டுப்பட்டுள்ளனர்.

**குறிப்பு** - இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளை அனைத்து முறைகளினாலும் உறுதிப்படுத்தாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதோடு, அவ்வாறான விண்ணப்பதாரிகளுக்கு இது தொடர்பில் பதில் அனுப்பப்பட மாட்டாது. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சைகளுக்கு அழைக்கப்படுகின்ற விண்ணப்பதாரிகளுக்கு போக்குவரத்துச் செலவுகள் எதுவும் செலுத்தப்படமாட்டாது.

சீ. டீ. விக்ரமரத்ன,
(பதில்) பொலிஸ் மா அதிபர்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பொலிஸ் வைத்தியசாலை தலைமை மருத்துவ உத்தியோகத்தர் பதவி**

01. விண்ணப்பிக்கும் பதவி : ......................................................................................................

02. விண்ணப்பதாரியின் பெயர் (முதலெழுத்துக்களுடன்): ...........................................................................

(i) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள்: ........................................................................ ..........................................

03. நிரந்தர முகவரி:- ....................................................................................

கடிதப் பரிமாற்ற முகவரி: .....................................

தொலைபேசி இலக்கம் : .........................................

மின்னஞ்சல் முகவரி : ................................

நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் பிரிவு : ......................................

04. பால்: ..............

05. பிறந்த திகதி:
2020.10.09 ஆந் திகதியன்று வயது: .............. வருடங்கள்.-...............மாதங்கள்.- ............... நாட்கள்.-................

06. குடியியல் நிலை.- திருமணமானவர்/திருமணமாகாதவர்/விதவை
(i) வாழ்க்கைத் துணையின் தொழில்.-..................................
(ii) வாழ்க்கைத் துணை தொழில் புரியும் இடம்.-........................................

07. தற்போதைய சேவை நிலைமை:-
(i) தற்போது வகிக்கும் பதவி : .............................
(ii) தற்போது வகிக்கும் பதிவியின் தரம் : ............................
(iii) தற்போது சேவை புரியும் இடம் : ...............................

08. நியமனம் பெற்ற திகதிகள்:-
(i) தற்போதைய பதவிக்கு நியமனம் பெற்ற திகதி:..................................
(ii) முதல் நியமனத் திகதி:........................................

09. தகைமைகள் ( திகதிகளுடன் பூரண விபரங்களைக் குறிப்பிடுக):-
(i) கல்வி:..................................
(ii) தொழிற் தகைமைகள்: ........................................
(iii) ஏனைய தகைமைகள்: ........................................

10. வகித்த பதவிகள்:-

| | பதவி | சேவை நிலையம் | சேவைக் காலம் |
|---|---|---|---|
| (i) | .................................. | ............................................. | ............................................. |
| (ii) | .................................. | ............................................. | ............................................. |
| (iii) | .................................. | ............................................. | ............................................. |
| (iv) | .................................. | ............................................. | ............................................. |
| (v) | .................................. | ............................................. | ............................................. |

11. பதவிக்கேற்ற வேறு தகைமைகள்:-
..............................................................................................................................................................................
..............................................................................................................................................................................

மேற்குறித்த விபரங்கள் உண்மையானதெனவும், சரியானதெனவும் உறுதிப்படுத்துகின்றேன். என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானவை என நிரூபிக்கப்படுமிடத்து, தகைமையற்றவராக்கப்படுவதற்கு/ நியமனம் பெற்றதன் பின்னர் கண்டறியப்பட்டால் எந்தவொரு இழப்பீடும் இன்றி பொலிஸ் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு நான் ஆளாவேன் என்பதையும் அறியத்தருகின்றேன்.

............................................
திகதி : .............. விண்ணப்பதாரியின் கையொப்பம்.

அமைச்சுச் செயலாளரின் சிபாரிசு

இவ் விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி / செல்வி ........................................................ அமைச்சில் சேவையில் ஈடுபட்டுள்ளார் என்பதையும், அவர் இப் பதவிக்காகத் தெரிவு செய்யப்பட்டால் குறித்த புதிய பதவிக்காக விடுவிக்கமுடியும் என்பதையும் தெரிவிக்கின்றேன்.

திகதி : ...................... ...................................................
அமைச்சுச் செயலாளரின் கையொப்பம் மற்றும்
பதவி முத்திரை

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## காணி அமைச்சு

## இலங்கை நிலஅளவைத் திணைக்களம்

### இலங்கை நில அளவைத் திணைக்களத்துக்கு பயிலுநர் நில அளவையாளர்களை நியமிப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2020

இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தின் பயிலுநர் நில அளவையாளர் பதவிகளுக்குச் சேர்த்துக்கொள்வதற்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2020, மார்கழி மாதம் கொழும்பில் நடாத்தப்படவுள்ளது. பரீட்சை நடைபெறும் திகதி மற்றும் இடம் பற்றி குறித்த காலப்பகுதியில் அறிவிக்கப்படும்.

இலங்கை நில அளவையாளர் சேவையின் III ஆம் வகுப்பில் காணப்படுகின்ற வெற்றிடங்களைப் பூர்த்திசெய்யும் வகையில் இலங்கை நில அளவையாளர் சேவையின் வெளிக்கள நில அளவையாளர் திணைக்களத்தின் பயிலுநர் நில அளவையாளர் பதவிகள் 31 இற்குச் சேர்த்துக்கொள்வதற்காக கீழ்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (அனைத்து வெற்றிடங்களும் அல்லது ஏதேனும் ஒரு அளவினை பூர்த்தி செய்யாதிருக்கும் அதிகாரம் ஆட்சேர்ப்பு அதிகாரிக்கு உண்டு.)

| | | |
|---|---|---|
| 01 | நில அளவை விஞ்ஞானப் பட்டதாரிகள் | 28 பதவிகள் |
| 02 | ஏனைய பட்டதாரிகள் | 03 பதவிகள் |

01. **தகைமை :**

1.1 **கல்வித்தகைமை.-**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின்/ நிறுவனத்தின்

(i) நில அளவை விஞ்ஞானத்திற்கான விஞ்ஞானமாணிப் பட்டம்

அல்லது

(ii) விஞ்ஞானமாணி விசேட பட்டம் (கணிதம் அல்லது பௌதீக விஞ்ஞானம் அல்லது கணினி/ தகவல் தொழில்நுட்பம் அடிப்படைப் பாடங்களாக) அல்லது

(iii) பொறியியல் விஞ்ஞானமாணிப் பட்டம் அல்லது

(iv) வகுப்புச் சித்தியுடன் கணினி/தகவல் தொழில்நுட்ப விஞ்ஞானமாணிப் பட்டம்

அல்லது

(v) வகுப்புச் சித்தியுடன் கணிதம் அல்லது பௌதீக விஞ்ஞானப் பாடங்களுடன் சாதாரண விஞ்ஞானமாணிப் பட்டத்தைக் கொண்டிருத்தல்

மற்றும்

(ஆ) க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்காக கணிதம் மற்றும் பௌதீக விஞ்ஞானப் பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

**குறிப்பு :** பட்டப் பரீட்சையொன்றின் பெறுபேற்றினை எதிர்பார்த்திருக்கின்ற எந்தவொரு நபருக்கும் இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியாது. ஆயினும், ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பரீட்சையில் சித்தியடைந்தவருக்கு, குறித்த பட்டப் பரீட்சையில் சித்தியடைந்தமை தொடர்பில் குறித்த பல்கலைக்கழகத்தின் பதிவாளரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட உத்தியோகபூர்வக் கடிதம் ஒன்றை விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பிவைக்கும் சந்தர்ப்பத்தில், இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்படும்.

1.2 **தொழில் தகைமை மற்றும் அனுபவம்** : தேவையில்லை.

1.3 **தேகாரோக்கியம்** .- அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்று வதற்குப் பொருத்தமான அனைத்துவித உடல் ஆரோக்கியம் உடைய முப்பரிமாணப் பார்வையுடன், நிறப் பிரிகை தொடர்பில் குறைபாடற்ற நபராக இருக்க வேண்டும்.

1.4 **ஏனைய தகைமைகள்.-**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும் ;

(iii) ஏதேனும் ஒரு மதத்தில் பூசகராக இருப்பவர் இந்தப் பதவிக்குச் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார் என்பதுடன், அவ்வாறானவர்கள் இந்தப் பதவிக்கு விண்ணப்பிப்பதற்கும் தகுதியற்றவர்கள் ஆவர். மேலும் ஆட்சேர்ப்புப் பரீட்சையில் தோற்றுவதற்கு எவ்வித அனுமதியும் அவர்களுக்கு இல்லை.

(iv) பணியில் அமர்த்துவதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனைத்துத் தகுதிகளையும் பூரணப்படுத்தியதாகக் கருதப்படுவது, இந்த வர்த்தமானி அறிக்கையில் தகைமைகள் பூரணப்படுத்தப்பட வேண்டிய திகதி எனக் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு அங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் அனைத்து விதத்திலும் பூர்த்தி செய்யப்பட்டிருந்தால் மட்டுமே ஆகும். தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக சான்றிதழ்களின் நகல் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்.

1.5 **வயது**.-

1.5.1 குறைந்தளவு வயதெல்லை : 22 வயது

1.5.2 கூடிய வயதெல்லை : 28 வயது

(அதற்கேற்ப, 1998.10.12 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1992.10.12 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னர் பிறந்த திகதியைக் கொண்டிருப்பவர்கள் மட்டுமே விண்ணப்பிப்பதற்குத் தகைமையுடையவர்களாவர்.)

02. **சேர்த்துக்கொள்ளும் முறை**.- பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் மட்டுமே நடாத்தப்படும் எழுத்து மூலப் பரீட்சை மூலமாக ஆட்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர். அனைத்து வினாப்பத்திரங்களிலும் குறைந்தளவு 40% புள்ளிகளைப் பெற்று அனைத்துப் பாடங்களிலும் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள், தாங்கள் பெற்ற புள்ளிகளின் தர வரிசைக்கு ஏற்ப, தகைமை மற்றும் சாதாரண உடலாரோக்கியப் பரிசோதனைக்காக நில அளவையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுகின்ற சாதாரண நேர்முகப் பரீட்சையின் பின்னர் இலங்கை நில அளவையாளர் திணைக்களத்தின் வெளிக்கள நில அளைவத் திணைக்களத்தின் பயிலுநர் நில அளவையாளர்களாக நியமிக்கப்படுவர்.

(அ) இலங்கை நில அளவையாளர் சேவையின் வெளிக்கள, நில அளைவத் திணைக்களத்தில் பயிலுநர் நில அளவையாளர் பதவிக்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சை தொடர்பான விபரம் :

இலங்கை நில அளவையாளர் திணைக்களத்தின் பயிலுநர் நில அளவையாளர் பதவிக்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படுவதுடன், விண்ணப்பதாரிகள் ஏதேனும் ஒரு மொழி மூலமே பரீட்சைக்குத் தோற்ற முடியும். மேலும் பரீட்சைக்காக விண்ணப்பித்த மொழி மூலத்தை பின்னர் மாற்ற முடியாது. இந்தப் பரீட்சையானது கீழ்வரும் வகையில் மூன்று விடயங்களின் அடிப்படையில் இடம்பெறும். அனைத்து விண்ணப்பதாரிகளும் மூன்று வினாப்பத்திரங்களுக்கும் தோற்ற வேண்டும்.

| | வினாப்பத்திரத்தின் பெயர் | நேரம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைவதற்குரிய புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | கிரகித்தல் | 2 மணி | 100 | 40 |
| 2 | நுண்ணறிவு | 2 மணி | 100 | 40 |
| 3 | பொது அறிவு | 2 மணி | 100 | 40 |

**கிரகித்தல்** : இரண்டு மணித்தியாலங்களுக்குரிய இந்த வினாப்பத்திரத்தின் மூலம் சிறு சிறு பந்திகள் பல வழங்கப்படும். சில பந்திகள் வழங்கப்படுவதற்கான காரணம் ஒரே வாக்கியத்தில் பதில் அளிப்பதற்காகவேயாகும். அடிக்கோடிடப்பட்ட சொற்களைத் தெளிவுறுத்துவதற்காகவும் வினாக்கள் வழங்கப்படும். இன்னும் சில பந்திகள் தொடர்பில் விண்ணப்பதாரிகளிடமிருந்து மாற்றுக் கருத்துக்கள் பல வழங்கப்படுவதுடன், அவற்றில் ஒன்று இந்த பந்தியின் உள்ளடக்கக் கருத்துக்களுடன் மிகவும் பொருத்தமுடையதாக இருக்கும். விண்ணப்பதாரி இவற்றிலிருந்து மிகவும் பொருத்தமானதைத் தெரிவு செய்வதை எதிர்பார்க்கப்படும். இந்த வினாக்கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதற்கான காரணம் விண்ணப்பதாரிகள் குறித்த பந்திகளின் அர்த்தத்தை விளங்கினார்களா என்பதைப் பரிசோதிப்பதற்காவே ஆகும். மேலும் சுருக்கம் எழுதுவதற்காக நீளமான பந்தி ஒன்றும் வழங்கப்படும்.

**நுண்ணறிவுப் பரீட்சை** : இரண்டு (2) மணித்தியாலங்களுக்குரிய இந்த வினாப்பத்திரமானது விண்ணப்பதாரியின் தர்க்கரீதியான சிந்தனைக்கும், அவரது உள்ளத்துப் பகுப்பாய்வுத் திறன் மற்றும் அவரது தீர்மானம் எடுக்கும் பலத்தையும் பரிசோதிப்பதற்காகவே இந்த வினாப்பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த வினாப்பத்திரமானது பல்தேர்வு வினா முறையில் பொருத்தமான விடையுடன் கூடியதாக உள்ளது.

**பொது அறிவு** : இரண்டு மணித்தியாலங்களுக்குரிய (2) இந்த வினாப்பத்திரம், இலங்கையின் அரசியல், சமூக, கலாசார, பொருளாதார, சுற்றாடல் சார்ந்த விடயங்களை உள்ளடக்கியிருப்பதுடன், தேசிய மற்றும் சர்வதேசத்தில்

முக்கியத்துவம் வாய்ந்த நவீன விடயங்கள் மற்றும் விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் தொழிற்றுறை வளர்ச்சி தொடர்பில் உள்ள அறிவினை அறிந்து கொள்ளும் வண்ணம் தயாரிக்கப்பட்டுள்ள வினாப்பத்திரமாகும். வினாக்கள் பலவற்றிலிருந்தும் தனக்கு விருப்பமான வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கு அனுமதி உண்டு.

**குறிப்பு :**

(அ) இந்தப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற விண்ணப்பதாரிகளின் தெளிவில்லாத கையெழுத்து மற்றும் எழுத்துப் பிழைகளுக்குப் புள்ளிகள் குறைக்கப்படும். தெளிவற்ற கையெழுத்தை உடையவர்கள் பரீட்சையில் தகுதியற்றோர் ஆவதற்கான வாய்ப்பும் உள்ளது.

(ஆ) வர்த்தமானி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் உள்ளவர்கள் மாத்திரம் விண்ணப் பித்துள்ளார்கள் என்ற தீர்க்கமான முடிவின் படியும், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லையில், விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் குறித்த பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி, அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாகப் பூரணப்படுத்திய விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டவுடனேயே அது தொடர்பில் பத்திரிகை அறிவித்தல் ஒன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். பத்திரிகை அறிவித்தல் பிரசுரமாகி 02 அல்லது 03 நாட்களாகியும் தனது அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாத அபேட்சகர், அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளபடி அது தொடர்பில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் (நிறுவன மற்றும்/வெளிநாட்டுப் பரீட்சை) நிறுவனக் கிளையுடன் தொடர்புகொண்டு விசாரிக்க வேண்டும். அவ்வாறு விசாரிக்கும்போது, விண்ணப்பதாரி விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், முகவரி போன்றவற்றைச் சரிவரக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பதாரி கொழும்பு அல்லாத ஏனைய பகுதியைச் சேர்ந்தவராக இருந்தால் குறித்த விபரங்களுடன், தொலைநகல் மூலம் விண்ணப்பப்பத்திரத்தை இலகுவாகப் பெற்று கொள்ளும் பொருட்டு விண்ணப்பதாரியின் தொலைநகல் (பெக்ஸ்) இலக்கத்தையும் குறிப்பிட்டு, வேண்டுகோள் கடிதமொன்றுடன் அறிவித்தலில் வழங்கப்பட்டுள்ள பெக்ஸ் இலக்கத்திற்கு அனுப்பி, விசாரிப்பது மிகவும் உசிதமான நடவடிக்கையாகும். அவ்வாறு விசாரிக்கும்போது, பரீட்சைத் திணைக்களம் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக விசாரிக்கும் போது பதிலளிப்பதற்காக, தங்களிடம் உள்ள விண்ணப்பப்படிவத்தின் நகல் பிரதியையும், பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்காக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டின் நகல் பிரதியையும், விண்ணப்பத்தை பதிவுத் தபாலில் அனுப்பும்போது கிடைத்த பற்றுச்சீட்டின் நகல் பிரதியையும் தயாராக வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.

(இ) பரீட்சை நடைபெறுவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிமுறைகளுக்கு பரீட்சைக்குத் தோற்றவுள்ள அபேட்சகர்கள் கட்டுப்பட வேண்டும். அந்த விதிமுறைகளை மீறனால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்குக் கட்டுப்பட வேண்டிவரும்.

(ஈ) இந்த அறிவித்தலின் 02 ஆம் பந்திக்கு ஏற்ப, தகைமைகள் உடைய விண்ணப்பதாரிகளின் பெயர்கள் உள்ளிட்ட அவர்களின் பெறுபேறுகள் நில அளவையாளர் நாயகம், நில அளவைத் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்படும். அதற்கு மேலதிகமாக பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் அவர்களின் பெறுபேறுகள் தனிப்பட்ட ரீதியாக அனுப்பிவைக்கப்படும். அல்லது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www.result.exams.gov.lk எனும் இணையத்தளத்தின் மூலம் அறியத்தரப்படும்.

03. **சேவை விதிமுறைகள் :**

(i) **சம்பளம்.**- இந்தப் பதவிக்கு வழங்கப்படும் மாதாந்தச் சம்பள அளவுத்திட்டம் 2016.02.25 ஆந் திகதியினாலான அரசாங்க நிருவாக சேவைச் சுற்று நிருப இலக்கம் 03/2016 (MN-5-2016) இற்கு ஏற்ப ரூபா 34,605 - 10 × 660 - 11 × 755 - 15 × 930 - ரூபா 63,460 ஆக இருப்பதுடன் நியமனம் செயற்பாட்டுக்கு வரும் திகதியிலிருந்து உங்களுக்கு சம்பளம் வழங்கப்படும்.

(ii) **பதவியின் இயல்பு.**- இந்தப் பதவியானது நிரந்தரமானதும் ஓய்வூதியம் உடையதுமாகும் என்பதுடன், உங்களுக்குரிய ஓய்வூதியம் தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்குக் கட்டுப்பட வேண்டும். மேலும், நீங்கள் விதவை, அநாதைகள் ஓய்வூதியச் சம்பளத் திட்டத்திற்கும்/தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியச் சம்பளத் திட்டத்திற்கும் கட்டுப்பட வேண்டும். மேலும் நீங்கள் விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு/ தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கும் பங்களிப்புச் செய்ய வேண்டும். அரசாங்கத்தினால் அடிக்கடி தீர்மானிக்கப்படுவதற்கு ஏற்ப, உங்களால் அதற்காக அங்கத்துவப் பணம் வழங்கப்பட வேண்டும்.

(iii) **தொடக்கப்பயிலுநர்.**-

(அ) இலங்கை நில அளவையாளர் சேவையின் (வெளிக்கள நில அளைவயாளர்) திணைக்களத்தின் பயிலுநர் நில அளவையாளர் பதவிக்கு நியமிக்கப்படுகின்ற நில அளவை விஞ்ஞானப் பட்டதாரிகளுக்கு திணைக்களச் செயற்பாடுகள் தொடர்பில் பயிற்சியொன்று வழங்கப்படும்.

(ஆ) இலங்கை நில அளவையாளர் சேவையின் வெளிக்கள நில அளவையாளர் பதவிக்கு உள்ளீர்க்கப்படும் நில அளவை விஞ்ஞானப் பட்டதாரிகள் அல்லாத ஏனைய பட்டங்களை உடைய பட்டதாரிகள், அவர்களின் இரண்டாவது பட்டமாக நில அளவை விஞ்ஞானம் தொடர்பில் விஞ்ஞானமாணி பட்டப் பாடநெறியொன்றை அளவையியல் மற்றும் படமாக்கல் நிறுவனத்தில் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ய வேண்டும் என்பதுடன், திணைக்களச் செயற்பாடுகள் தொடர்பிலான பயிற்சி ஒன்றும் அவர்களுக்காக வழங்கப்படும்.

(iv) இலங்கை நில அளவையாளர் சேவையின் III ஆம் வகுப்புக்குச் சேர்த்துக் கொண்டு, பணியில் நிரந்தரமாக்குதல்.

பயிலுநர் பயிற்சியினை திருப்திகரமாகப் பூர்த்திசெய்த, அரசகரும மொழி அல்லாத மொழியில் சேவைக்கு இணைத்துக் கொள்ளப்படுகின்ற பயிலுநர் நில அளவையாளர்களை பதவியில் நிரந்தரமாக்குவதற்கு முன்னர் அரசகரும மொழியில் புலமை பெற்ற மற்றும் பயிலுநர் நில அளவையாளராக தனது தொழில் மற்றும் நடத்தையை சிறப்பான முறையில் பேணிய, இலங்கை நில அளவையாளர் சேவையின் வெளிக்கள நில அளவையாளர் திணைக்களத்தின் பயிலுநர் நில அளவையாளர் பதவியில் சேவையாற்றுகின்ற, 2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நில அளவைச் சட்டத்தின்படி நில அளவைச் சபையில் பதிவு செய்துள்ள நில அளவையாளராகிய கீழ்க் குறிப்பிடப்படும் தகைமைகளை பூர்த்தி செய்துள்ளவர்களிலிருந்து இலங்கை நில அளவையாளர் சேவையின் III ஆம் வகுப்புக்குச் ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவர்.

(அ) நில அளவை விஞ்ஞானப் பட்டத்துடன் பயிலுநர் நில அளவையாளர் பதவிக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட அதிகாரி ஒருவரானால், ஆறு (06) மாதங்கள் திணைக்களத்தின் செயற்பாடுகள் தொடர்பில் பயிலுநர் பயிற்சியுடன் நில அளவைத் திணைக்களத்தின் பயிலுநர் நில அளவையாளராக மூன்று (03) ஆண்டுகள் சுறுசுறுப்பாகவும் திருப்திகரமாகவும் பணியாற்றியிருக்க வேண்டும்.

(ஆ) நில அளவை விஞ்ஞானம் அல்லாத வேறு ஒரு பட்டத்துடன் பயிலுநர் நில அளவையாளர் பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட அதிகாரி ஒருவராக இருந்தால், நில அளவை விஞ்ஞானப் பட்டமொன்றைப் பூரணப்படுத்தியிருத்தல் மற்றும் அதன் பின்னர் நில அளவைத் திணைக்களத்தில் பயிலுநர் நில அளவையாளராக சுறுசுறுப்பாகவும் திறமையாகவும் மூன்று (03) ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றியிருக்க வேண்டும்.

(v) நியமனம் பெறுபவர்களினால் தான் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை செய்வதற்கான தேகாரோக்கியம் உடையவரா இல்லையா என்பதைப் பரீட்சிப்பதற்காக அரசாங்க வைத்தியசாலை ஒன்றின் வைத்திய அதிகாரி ஒருவரினால் மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனைக்கு உட்பட வேண்டும்.

(vi) நியமிக்கப்படுகின்ற அதிகாரிகளுக்கு வழங்கப்படுகின்ற அரசாங்கக் களஞ்சியசாலைப் பொருட்களுக்காக ரூபா 25,000.00 பிணைப்பணமாகச் செலுத்த வேண்டும்.

(vii) நில அளவை விஞ்ஞானப் பட்டத்துடன் பயிலுநர் நில அளவையாளராக நியமனம் பெறுகின்ற அதிகாரிகள், நில அளவையாளராக நியமனம் பெறும் திகதியிலிருந்து ஆறு ஆண்டுகள் (06) கட்டாயச் சேவைக்காலத்திற்கும், வேறு பட்டங்களுடன் பயிலுநர் நில அளவையாளராக நியமனம் பெறுகின்ற அதிகாரிகள், நில அளவையாளராக நியமனம் பெறுகின்ற திகதியிலிருந்து எட்டு (08) ஆண்டுகள் கட்டாயச் சேவைக்காலத்திற்கும் பணியாற்ற வேண்டும். பயிலுநர் நில அளவையாளர்களாக நியமனம் பெறுகின்ற அனைத்து அதிகாரிகளும் நில அளவையாளர் நாயகத்துடன் ஒப்பந்தமொன்று செய்ய வேண்டும் என்பதுடன், கட்டாயச் சேவைக் காலத்திற்கு முன்னர் பதவி விலகுகின்ற அதிகாரிகள் தொடர்பில் குறித்த உடன்படிக்கைக்கேற்ப செயற்பட வேண்டும்.

(viii) தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், நிறுவன விதிமுறைகளுக்கும், பண விதிமுறைகளுக்கும், திணைக்களத்தின் கட்டளைகளுக்கும், காலத்திற்கு காலம் அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற வேறு விதிமுறைகளுக்கும் உத்தரவுகளுக்கும் கட்டுப்பட வேண்டும்.

04. **பிழையான தகவல்களை வழங்குதல்.-** இலங்கை நில அளவைச் சேவையின் வெளிக்கள நில அளவைத் திணைக்களத்தின் பயிலுநர் நில அளவையாளர் பதவிகளுக்குச் சேர்த்துக் கொள்வதற்காக விண்ணப்பிக்கும்போது, யாரேனும் ஒருவருக்கு தகைமை இல்லாமை கண்டுபிடிக்கப்பட்டால் எந்தவொரு நேரத்திலும் அவரின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். இந்த பயிலுநர் நில அளயையாளர் பதவிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டதன் பின்னர்கூட, விண்ணப்பதாரி ஒருவர் வழங்கியுள்ள ஏதேனும் ஒரு தகவல் பிழையெனத் தெரிந்தும் முன்வைக்கப்பட்டிருந்தமை அல்லது ஏதேனும் ஒரு முக்கிய விடயம் வேண்டுமென்றே மறைக்கப்பட்டிருந்தமை தெரியவந்தால், குறித்த நபர் அரசாங்க சேவையிலிருந்து பதவி நீக்கப்படுவர்.

05. **விண்ணப்பப் பத்திரம் தயாரித்தலும் முன்வைத்தலும் :**

(i) இந்த வர்த்தமானி அறிக்கையின் கடைசியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்ப, 21 × 29 செ. மீ. (ஏ4) அளவுக் கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி, தாமே விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்தல் வேண்டும். இல. 01 இலிருந்து இலக்கம் 05 வரையுள்ள தலைப்புகள் 01 ஆவது பக்கத்திலும், ஏனையவை அடுத்த பக்கத்திலும் வரக்கூடிய முறையில் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்பட வேண்டும்.

(ii) தான் பரீட்சை எழுதவுள்ள மொழி மூலத்தில் மட்டுமே விண்ணப்பம் தயாரிக்கப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்திற்கான தகவல்கள் யாவும் தனது சொந்தக் கையெழுத்தினால் தெளிவாகப் பூரணப்படுத்தப்பட வேண்டும். தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழியுடன் ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழியுடன் ஆங்கிலத்திலும் குறிப்பிட வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் அனைத்துப் பிரிவுகளையும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதற்கு ஏற்ப, விண்ணப்பதாரியினால் பூரணப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன், தனக்குப் பொருத்தமற்ற பகுதிகளுக்கு பொருத்தமற்றது எனக் குறிப்பிட வேண்டும்.

(iii) குறித்த மாதிரி விண்ணப்பத்தை ஒத்திராத, குறித்த திகதிக்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தியிராத, சரிவர பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். சரிவர பூரணப்படுத்தாமை தொடர்பில் ஏற்படும் நட்டத்தை விண்ணப்பதாரியே ஏற்க வேண்டும். விண்ணப்பத்தின் நகல் பிரதியொன்றை விண்ணப்பதாரி தன்னிடம் வைத்திருப்பது நன்மையளிக்கும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் வர்த்தமானி அறிவித்தலில் உள்ளது போன்றதுதானா என விண்ணப்பதாரி உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்தில் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதற்கு நேரிடலாம். மேலும் விண்ணப்பப்படிவத்தில் பூர்த்தி செய்யப்படாத வெற்றிடங்கள் இருந்தாலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம் என்பதில் விண்ணப்பதாரி கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

(iv) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தனது விண்ணப்பப்படிவத்தை திணைக்களத் தலைவர் ஊடாகவும், அரசாங்கக் கூட்டுத்தாபனம், சபை, உள்ளூராட்சி நிறுவனங்கள் முதலியவற்றில் கடமையாற்றுபவர்கள் தனது நிறுவனத் தலைவர் ஊடாகவும் குறித்த தினத்தில் அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும். நிறுவனத் தலைவர் ஊடாக முன்வைக்கப்படும் விண்ணப்பப்படிவம் என்றாலும், குறித்த தினத்திற்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தற்போது அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப்படிவங்களில் கையொப்பத்தை உறுதி செய்வதற்காக திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம் மற்றும் பதவி முத்திரை இல்லாதுவிட்டாலும் அந்த விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும்.

(v) விண்ணப்பப்படிவம் அனுப்பிவைக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை நில அளவையாளர் சேவையின் வெளிக்கள, நில அளவைத் திணைக்களத்தின் பயிலுநர் நில அளவையாளர் பதவிக்காகச் சேர்த்துக்கொள்ளல் - திறந்த போட்டிப் பரீட்சை - 2020" எனத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

(vi) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியாகிய 2020.10.12 ஆந் திகதிக்கு வர்த்தமானி அறிக்கையில் கோரப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்க வேண்டும். குறித்த பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி 2020.10.12 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பத்தை அனுப்புகின்ற, குறித்த தகைமைகள் அனைத்தும் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு மட்டுமே எழுத்து மூலப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதி வழங்குவார்.

06. **கையொப்பத்தினை உறுதிப்படுத்தல்.**- தற்போது அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரியின் கையொப்பத்தை, குறித்த திணைக்களத்தின் தலைவர் அல்லது அவருக்குப் பதிலாக அதிகாரம் பெற்ற அதிகாரியே உறுதிப்படுத்த வேண்டும். ஏனைய விண்ணப்பதாரிகளின் கையொப்பத்தை அவற்றை உறுதிப்படுத்துவற்கு அதிகாரம் அளிக்கப்பட்ட ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதாவது, அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபர் ஒருவர், சமாதான நீதவான்

ஒருவர், சத்தியப்பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் ஆணைபெற்ற அலுவலர், பொலிஸ் சேவையில் வர்த்தமானி அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பதவியொன்றை வகிப்பவர், அரசாங்க சேவையில் நிரந்தர பதவிநிலை உத்தியோகத்தர் அல்லது அரச நிருவாக சுற்று நிரூப இலக்கம் 03/2016 இல் பதவி நிலை வகிக்கும் சிரேஷ்ட நிலையில் அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் அதிகாரி ஆகியோரில் ஒருவர் உறுதிப்படுத்த வேண்டும்.

07. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் ரூபா 1,200.00 ஆகும். இந்தப் பணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இன் கீழ் அரசாங்க வருமானத்திற்குச் சேரும் வகையில் இலங்கையிலுள்ள எந்தவொரு தபால் நிலையத்திலும் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை, விண்ணப்பப்படிவத்தில் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் கழறாத வண்ணம் ஒட்ட வேண்டும். (பற்றுச்சீட்டின் நகல் பிரதியொன்றை தங்களின் பயன்கருதி தங்களிடம் வைத்துக்கொள்ளுங்கள்.) எந்தவொரு காரணத்திற்காகவும் பரீட்சைக் கட்டணம் திருப்பிச் செலுத்தப்படமாட்டாது என்பதுடன், காசுக்கட்டளைகள் அல்லது காசோலை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பற்றுச்சீட்டு இல்லாமல் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

08. **விண்ணப்பத்தை அனுப்புதல்**.- குறித்த பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தை 2020.10.12 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்க வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
அமைப்பு (நிறுவன மற்றும் வெளிநாட்டுப் பரீட்சை) கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
த. பெ. எண் 1503,
கொழும்பு.

09. **விண்ணப்பபதாரியின் ஆளடையாளம்**.- விண்ணப்பதாரிகள், பரீட்சை மண்டபத்தில் அவர்கள் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் தங்கள் ஆளடையாளத்தை பரீட்சை மண்டபத்தின் தலைவரின் திருப்திக்கு உறுதிப்படுத்த வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று இந்த நோக்கத்திற்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) தேசிய ஆள் அடையாள அட்டை;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
(iii) செல்லுபடியாகும் இலங்கைச் சாரதி அனுமதிப்பத்திரம்.

மேலும் பரீட்சார்த்திகள் தங்கள் ஆளடையாளத்தை சரிபார்க்கும் வகையில் முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மறைக்காமல் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைய வேண்டும். அவ்வாறு தங்கள் அடையாளங்களை நிரூபிக்க மறுக்கும் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைந்த தருணம் முதல் பரீட்சை முடிந்து வெளியேறும் வரை, பரீட்சார்த்தியை அடையாளம் காணும் வகையில் பரீட்சை மண்டப அதிகாரிகளுக்கு, முகமும் இரு காதுகளும் தெரியும் வண்ணம் மறைக்கப்படாமல் இருக்க வேண்டும்.

10. இந்த விதிமுறைகளில் விவரிக்கப்படாத வேறு ஏதேனும் தொடர்புடைய விடயங்கள் இருந்தால், அது நில அளவையாளர் நாயகத்தின் விருப்பப்படி தீர்மானிக்கப்படும். மேலும் அனைத்து விண்ணப்பதாரர்களும் இந்த வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்குக் கட்டுப்பட வேண்டும்.

11. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படும் மேற்படி அறிவித்தலில் மொழிகளுக்கிடையிலான உரைகளில் ஏதேனும் பொருத்தமின்மையோ அல்லது ஒத்தியங்காத தன்மையோ காணப்படின் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூலத்திலான அறிவித்தலுக்கு ஏற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ஏ. எல். ஷியாமலி சித்ரலேக்கா பெரேரா,
நில அளவையாளர் நாயகம்.

நில அளவைத் திணைக்களம்,
கொழும்பு 5,
2020, செத்தெம்பர் 02.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**காணி அமைச்சு**

**நில அளவைத் திணைக்களம்**

**இலங்கை நில அளவைத் திணைக்களத்தின் பயிலுநர் நில அளவையாளர் பதவிகளுக்கு இணைத்துக் கொள்வதற்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சை - 2020**

**Open Competitive Examination for Recruitment to the Posts of Apprentice Surveyors in the Survey Department of Sri Lanka - 2020**

[ ]
(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3 [ ]
ஆங்கிலம் - 4
(பொருத்தமான இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

தாங்கள் பெற்றுள்ள பட்டம்:
01 - நில அளவை விஞ்ஞானம் [ ]
02 - பிற
(பொருத்தமான இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

1.0

1.1 முழுப் பெயர் (ஆங்கிலப் பெரிய எழுத்துக்களில்) :----.

1.2 முதலெழுத்துக்களை பின்னால் இட்டு, முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலப் பெரிய எழுத்துக்களில்) :----.

(உதாரணம் : PERERA, A. B. C.)

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

1.4 பிறந்த திகதி : ஆண்டு : [ ][ ][ ][ ] மாதம் : [ ][ ] திகதி : [ ][ ]

1.5 2020.10.12 ஆந் திகதிக்கு வயது : வருடங்கள் : [ ][ ] மாதங்கள் : [ ][ ] நாட்கள் : [ ][ ]

1.6 திருமணமானவர்/திருமணமாகாதவர் : திருமணமானவர் : [ ] திருமணமாகாதவர்: [ ]

2.0

2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.3 அனுமதிப்பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி :----.

3.0 ஆண்/பெண் : [ ] ஆண் - 0
பெண் - 1 (பொருத்தமான இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

4.0 தேசிய ஆள் அடையாள அட்டை இல. : [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

5.0 தொலைபேசி இல. கையடக்கம் : [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

நிரந்தரம் : [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

6.0 விண்ணப்பதாரியின் நிரந்தர வதிவிட மாவட்டம் :-----.

6.1 பிரதேச செயலாளர் பிரிவு :-----.

6.2 கிராம அலுவலர் பிரிவு :-----.

7.0 கல்வித் தகைமை :

7.1 பெற்றுக்கொண்டுள்ள பட்டம் : (தெளிவாகக் குறிப்பிட்டு, பட்டச்சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----.

7.1.1 பட்டம் தொடர்பிலான விபரம்:

(i) பட்டம் செல்லுபடியாகும் திகதி :----------.

(ii) பல்கலைக்கழகம் /நிறுவனம் :----------.

(iii) பாடங்கள் :------------.

------------

------------

(iv) வகுப்பு நிலை :---------.

(v) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மொழி மூலம் :----------.

7.2 க. பொ. த. (உ.த.)

(i) பரீட்சை சித்தியடைந்த ஆண்டு :----.

(ii) பரீட்சைச் சுட்டெண் :----.

(iii) மேற்கொண்ட பாடப் பிரிவு :----.

| பாடங்கள் | பெறுபேறு |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

8.0 நீங்கள் என்றாவது ஒரு நாள் ஏதேனும் ஒரு தவறுக்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக தீர்ப்பிடப்பட்டுள்ளீரா? (பொருத்தமான கூட்டில் ✓ எனும் குறியீட்டை இடவும்.)

ஆம் : ☐ இல்லை: ☐

8.1 ஆம் என்றால், விபரத்தைக் குறிப்பிடவும் :----------.

9.0 விண்ணப்பதாரி இதற்கு முன்னர் அரசாங்க/மாகாண சேவையில் தொழில்வாய்ப்புப் பெற்று, அதிலிருந்து விலகியிருந்தால் விலகியதற்கான காரணம் :---------------.

10.0 பரீட்சைக் கட்டணம் செலுத்தியமை தொடர்பிலான விபரம் :

10.1 பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :----------.

10.2 பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி :----------.

10.3 செலுத்திய தொகை : ரூபா :------------.

| |
|---|
| பணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும். (அதன் நகல் பிரதியொன்றை உங்களிடம் வைத்திருங்கள்.) |

11.0 **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

(அ) இங்கே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் யாவும் எனது அறிவுக்கெட்டியவரை உண்மையானவை என்றும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட இலக்கம் .............. மற்றும் ............. ஆந் திகதிய பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளேன் எனவும் இத்தால் குறிப்பிடுகிறேன். இங்கு ஏதேனும் ஒரு பகுதி சரிவரப் பூரணப்படுத்தப்படாதிருப்பின்/ பிழையாகப் பூரணப்படுத்தப்பட்டிருப்பின் ஏற்படக்கூடிய நட்டத்தை ஏற்றுக்கொள்வேன். மேலும் விண்ணப்பப்படிவத்தின் அனைத்துப் பகுதிகளையும் பூரணப்படுத்தியுள்ளேன் எனவும் இத்தால் குறிப்பிடுகின்றேன்.

(ஆ) என்னால் குறிப்பிடப்பட்டுள்ள மேற்படி விடயங்கள் பிழையெனக் கண்டுபிடிக்கப்பட்டால், நியமிக்கப்படுவதற்கு முன்னர் பொருத்தமற்றவர் என்பதற்கும் நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் பணிநீக்கம் செய்யப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) மேலும் பரீட்சை நடாத்தப்படுவது தொடர்பில் நில அளவையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிமுறைகளுக்கும் சட்ட திட்டங்களுக்கும் பெறுபேறு வழங்கப்படுவது தொடர்பிலான முடிவுகளுக்கும் நான் கீழ்ப்படிவதாகவும் இத்தால் உறதியளிக்கின்றேன்.

(ஈ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு விபரத்தையும் பின்னர் மாற்றமாட்டேன்.

-----
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

12.0 விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் (வர்த்தமானி அறிக்கையின் 06 ஆவது பந்திக்கு ஏற்ப):

.......................................... (முழுப் பெயர்) என்ற இந்த விண்ணப்பதாரியை நான் தனிப்பட்ட ரீதியில் நன்கு அறிவேன் எனவும், அவர் ............ ஆந் திகதி எனது முன்னிலையில் அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் நான் சான்றுப்படுத்துகின்றேன்.

-----
சான்றுப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி :-----.
சான்றுப்படுத்துபவரின் முழுப்பெயர் :--------.
பதவி :--------.
முகவரி :--------.
(இலச்சினை மூலம் உறுதி செய்ய வேண்டும்.)

13.0 **தற்போது அரசாங்க திணைக்களங்களின் அல்லது அரசாங்க நிறுவனங்களில் பணிபுரிவோருக்கு மட்டும் ஏற்புடையது** :

திணைக்களம்/நிறுவனத் தலைவரின் சான்று :-

இந்த விண்ணப்பப்பத்திரத்தின் விண்ணப்பதாரி திரு./ திருமதி/ செல்வி ............................ என்பவர் திணைக்களத்தில்/ நிறுவனத்தில் ............. ஆந் திகதியிலிருந்து ................. திகதி வரை .............. ஆக பணியாற்றுவதுடன், அவருக்கு எதிராக முழுமையற்ற ஒழுக்காற்று குற்றச்சாட்டு அறிக்கை உள்ளது/இல்லை. அவரது பணியாற்றுகைகள் மற்றும் அவரது செயற்பாடுகள் மற்றும் அவரது வருகை என்பன திருப்தியளிக்கின்றது/ திருப்தியில்லை. குறித்த பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்பதுடன், அந்தப் பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் எனவும், அவர் ........... எனும் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் இந்தத் திணைக்களத்திலிருந்து/நிறுவனத்திலிருந்து அவரை விடுவிக்க முடியும்/முடியாது என்பதையும் அறியத்தருகின்றேன்.

----
திணைக்கள/நிறுவனத்
தலைவரின் கையொப்பம்
மற்றும் பதவி முத்திரை.

9-396

---

## திருத்தம்

உள்ளக பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு

**கிராம அலுவலர் சேவையின் II ஆம் வகுப்பின் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2020**

2187 ஆம் இலக்கமுடைய 2020, யூலை மாதம் 31 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கிராம அலுவலர் சேவையின் II ஆம் வகுப்பின் அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை - 2020, பரீட்சை அறிவித்தலின் முதலாம் பந்தியின் மூன்றாம் பிரிவில், 9 ஆம் பந்தியில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி பின்வரும் வகையில் திருத்தியமைக்கப்பட்டுள்ளது:

1. முதலாம் பந்தியின் மூன்றாம் பிரிவு மாத்திரம் பின்வரும் வகையில் திருத்தியமைக்கப்பட்டுள்ளது:-

    * எழுத்துப் பரீட்சையை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் 2020, மார்கழி மாதம் நடாத்தவிருப்பதாகவும் அதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. 9 ஆம் பந்தியில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2020.09.30 வரை நீடிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க விண்ணப்பதாரிகள் 2020.09.30 ஆந் திகதி சகல தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3. இப்பரீட்சைக்காக இதுவரை விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மீண்டும் விண்ணப்பங்களை அனுப்புவதில் இருந்து தவிர்ந்து கொள்ளுமாறு அறியத்தருகின்றேன்.

கமல் குணரத்ன,
டப்டப்வி ஆர்டப்பி ஆர்எஸ்பி யுஎஸ்பி என்டிசி பிஎஸ்சி
மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ,
செயலாளர்,
உள்ளக பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும்
அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு.

உள்ளக பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு,
"நில மெதுர",
எல்விடிகல மாவத்தை,
கொழும்பு 05,
2020, செத்தெம்பர் 01.

9-498

---

## திருத்தம்

### கல்வி அமைச்சு

மூன்று வருட கால சேவை முன் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பாடநெறியைப் பயிலுவதற்காக 2018 ஆம் ஆண்டு க.பொ.த. (உ.தர) பெறுபேற்றின் அடிப்படையில் பயிலுநர்களை தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு உள்வாங்குதல் - 2020 தொடர்பாக 2020.09.04 ஆந் திகதி வெளியான வர்த்தமானியில் பிரசுரமான அறிவித்தல் இல. 09-144 ஆனது பின்வருமாறு திருத்தம் செய்யப்பட வேண்டும்:-

**பாடநெறி இலக்கம் 49 - வர்த்தகம் மற்றும் கணக்கீட்டுக் கல்வி (சிங்களம்)**
**50 - வர்த்தகம் மற்றும் கணக்கீட்டுக் கல்வி (தமிழ்)**

4.28

4.28.1 2018 ஆம் வருடத்தில் நடைபெற்ற க.பொ.த. (உ.தர) பரீட்சையில் கணக்கியல், வணிகக்கல்வி மற்றும் பொருளியல் எனும் வணிக பாடத்துறைக்குரிய பாடங்கள் மூன்று (03) அல்லது அவற்றில் இரண்டு (02) பாடங்களுடன் மூன்றாவது பாடமாக கீழ்க் குறிப்பிட்ட ஒரு பாடத்துடன் பாடங்கள் மூன்றில் (03) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

- வர்த்தக புள்ளிவிபரவியல், புவியியல், அரசியல் விஞ்ஞானம், வரலாறு, அளவையியலும் விஞ்ஞான முறையும், ஆங்கிலம், ஜேர்மன், பிரெஞ்சு, விவசாயம், இணைந்த கணிதம் அல்லது கணிதம், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பம், பௌதிகவியல்

மற்றும்

4.28.2 3.0 இல் 3.3.1 உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சா.தர) பரீட்சையில் வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் அல்லது முயற்சியாண்மைக் கல்வி பாடத்திற்கு குறைந்தபட்சம் திறமைச் சித்தியுடன் சித்தியடைந்திருத்தல்.

பேராசிரியர் கே. கபில சீ. கே. பெரேரா,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
இசுருபாய,
பத்தரமுல்லை,
2020, செத்தெம்பர் 07.

9-517

உள்ளக பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு

## குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் வெளிக்கள/அலுவலக முறைப்பட்ட -தொகுதி 2 சேவை வகுதியைச் சேர்ந்த அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை -2019 (2020)

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு, கீழ்க் காணும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. இவ் அறிவித்தலில் "திணைக்களத் தலைவர்" எனும் பதம் குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் எனப் பொருள்படும். இந்த மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலம், குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதுடன், வேறு விதத்தில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டில்லாத சந்தர்ப்பங்களில் "பதவி" எனும் பதம் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் தரம் II எனப் பொருள்படும்.

2. இப் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதி 2020, ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி ஆகும்.

2.1 எழுத்து மூலப் பரீட்சை: இப் பரீட்சை கீழ்க் காட்டப்பட்டவாறு மூன்று (03) வினாத் தாள்களைக் கொண்டதாகும்.

01. உளர்சார்பும், பொது அறிவும்.
02. ஆங்கில மொழி.
03. கணினி விஞ்ஞானம் தொடர்பான அடிப்படை அறிவு.

2.2 பரீட்சைத் திகதி: இப் பரீட்சை 2020 திசெம்பர் மாதம் கொழும்பில் நடைபெறும். இப் பரீட்சையை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச் செய்யும் தத்துவம் குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு உண்டு.

2.3 நேர்முகப் பரீட்சை:

(i) நிலவும் வெற்றிடங்களுள் 10% வீதம் மட்டும் பெண் விண்ணப்பதாரிகளுக்காக ஒதுக்கப்படும்.

(ii) குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைச் சபையினால், எழுத்து மூலப் பரீட்சைக்குத் தோற்றி, ஒவ்வொரு வினாத் தாளுக்கும் ஆகக் குறைந்தது 40% வீத புள்ளிகளை அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகளிலிருந்து, நிலவும் வெற்றிடங்களைப் போன்று இரு மடங்காக இருக்குமாறு, மேலே (i) இல் காட்டப்பட்ட அடிப்படைக்கு அமைவாக "ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகள்" நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். (நேர்முகப் பரீட்சை தகைமைகளைப் பரீட்சிப்பதற்காக மட்டுமே நடாத்தப்படும்).

(iii) நேர்முகப் பரீட்சையின் போது கீழே பந்தி 6.3 இன் கீழ் காட்டப்பட்டுள்ள உடல், உளத் தகைமைகள் பரீட்சிக்கப்படும்.

3. இப் பதவிக்கு நியமிக்கப்படுகின்ற பதவிகளின் எண்ணிக்கை ஐம்பது (50) ஆகும். இறுதியாக நிலவும் வெற்றிடத்திற்கு அல்லது வெற்றிடங்களுக்கு, சமமான புள்ளிகளைப் பெற்று, நிலவும் வெற்றிடங்களையும் விஞ்சிய விண்ணப்பதாரிகள் இருக்கின்ற சந்தர்ப்பத்தில், அவ் வெற்றிடத்தை/ வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பில் குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்பதுடன், இவ் ஆட்சேர்ப்பு நியமனம் அமுலுக்கு வரும் திகதியும் குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தினாலேயே தீர்மானிக்கப்படும்.

4. **சேவை நிபந்தனைகள்:**

4.1 அரசாங்க சேவை நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகளுக்கும், தாபனவிதிக் கோவை ஏற்பாடுகளுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும், 2009.02.20 ஆம் திகதிய 1589/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழு நடவடிக்கைமுறை விதிகளுக்கும், 2013.12.20 ஆந் திகதியுடையதாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் வெளிக்கள/ அலுவலக முறைப்பட்ட -தொகுதி 2 சேவை வகுதியைச் சேர்ந்த அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் தரம் II பதவிக்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறையிலுள்ள நியதிகளுக்கும், நிபந்தனைகளுக்கும், அவ் ஆட்சேர்ப்பு நடைமுறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள

அல்லது மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களுக்கும் கட்டுப்பட்டு, தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு நியமிக்கப்படுவர்.

4.2 இப் பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.

4.3 இந் நியமனம் ஒரு (01) வருட சேவைப் பரீட்சிப்புக்காலத்துக்கு கட்டுப்பட்டதாகும். அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு நியமிக்கப்பட்டு மூன்று (03) வருட காலப்பகுதிக்குள், ஆட்சேர்ப்பு நடைமுறையில் காட்டப்பட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்.

4.4 01/2014 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையினதும், அதனுடன் இணைந்த சுற்றறிக்கைகளினதும் பிரகாரம், சேவையில் இணைந்து ஐந்து (05) வருட காலப்பகுதிக்குள் உரிய மட்டத்திற்குரிய அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

5. **இப் பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம்:**

2016.02.25 ஆம் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் அட்டவணை I இற்கு அமைய இப் பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் ரூ. 34,605.00 -10X660 -11×755 -15X930 - ரூ. 63,460.00 (MN-5/2016) ஆகும் . மேற் கூறிய சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய, அதில் அட்டவணை II இற்கு அமையவே சம்பளம் செலுத்தப்படும். இதற்கு மேலதிகமாக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் வழங்கப்படுகின்ற பிற கொடுப்பனவுகளும் இவ் உத்தியோகத்தர்களுக்கும் உரித்தாகும்.

6. **ஆட்சேர்ப்பிற்கான தகைமைகள்:**

6.1 (i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(ii) சிறந்த நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.
(iii) தீவின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும், இப் பதவியில் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல், உள தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

6.2 **கல்வித் தகைமையும், அனுபவமும்:**

(i) க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன், ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஆகக் குறைந்தது ஒரு (01) பாடத்தில் (சாதாரண பொதுப் பரீட்சை நீங்கலாக) சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டிய கடைசித் திகதிக்கு அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில், நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமான MN-1/2016 அல்லது அதற்கு மேற்பட்ட சம்பள அளவுத் திட்டத்தையுடைய பதவியொன்றில் பத்து (10) வருடங்களுக்குக் குறையாத செயலூக்கமிக்க சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் "பட்டம் அளிப்பதற்கான நிறுவனமொன்றாக" அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் அளிக்கப்பட்ட பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

மற்றும்

தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டிய கடைசித் திகதிக்கு அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில், நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமான MN-1/2016 அல்லது அதற்கு மேற்பட்ட சம்பள அளவுத் திட்டத்தையுடைய பதவியொன்றில் ஐந்து (05) வருடங்களுக்குக் குறையாத செயலூக்கம்மிக்க சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**குறிப்பு**:

(i) பட்டம் பெற்ற திகதியும், க.பொ.த. (சா.த.) பரீட்சை/ க.பொ.த. (உ.த.) பரீட்சைகளில் மேற்சொன்னவாறு சித்தியடைந்திருக்க வேண்டிய திகதியும், தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டிய கடைசித் திகதியான 2020 ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி அல்லது அதற்கு முந்திய திகதியாக இருத்தல் வேண்டும்.

(ii) மேற்சொன்ன சேவைக் காலத்தைக் கணிப்பிடும் போது, அரசாங்க சேவையில் மற்றும்/ அல்லது மாகாண அரசாங்க சேவையில் உரியதும், தொடர்ச்சியானதுமான சேவைக் காலம் ஏற்றுக் கொள்ளப்படும்.

6.3 *உடற் தகைமைகள்:*

(i) விண்ணப்பதாரிகளின் உயரம் ஆகக் குறைந்தது 5 அடி 4 அங்குலம் (162.5 செ.மீ.) ஆகவும், மார்புச் சுற்றளவு 32 அங்குலம் (81.25 செ.மீ.) ஆகவும் இருத்தல் வேண்டும்.

(ii) பெண் விண்ணப்பதாரிகளின் உயரம் ஆகக் குறைந்தது 5 அடி 2 அங்குலம் (156 செ.மீ.) ஆக இருத்தல் வேண்டும்.

6.4 *வயதெல்லை:*

ஏற்கனவே அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு வயதெல்லை ஏற்புடையதாகாது .

7. **பரீட்சைக் கட்டணம்**:

பரீட்சைக் கட்டணம் ரூபா அறுநூறு (ரூ. 600.00) ஆகும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற கடைசித் திகதிக்கு முன்னர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் 20-03-02-13 எனும் வருமானத் தலைப்பிற்கு வரவு வைக்கும் வகையில், தீவின் எந்தவொரு தபால்/உபதபால் அலுவலகத்திலும் செலுத்தலாம். இப் பரீட்சைக் கட்டணத்திற்கு மேலதிகமாக வேறு எந்தவொரு கட்டணமும் அறவிடப்பட மாட்டாது. பணம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூண்டில் ஒட்டுதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இப்பரீட்சைக் கட்டணம் திருப்பிச் செலுத்தப்படவோ அல்லது பிறிதொரு பரீட்சைக்காக மாற்றப்படவோ மாட்டாது. பரீட்சைக் கட்டணம் சார்பில் காசுக் கட்டளை அல்லது முத்திரை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. (பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் நிழற் பிரதியொன்றை விண்ணப்பதாரிகள் தம் வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்).

8. **விண்ணப்பிக்கும் முறை**:

8.1 இவ் அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக, 8½"x12" அளவிலான கடதாசியின் (A4) இரு பக்கங்களையும் பாவித்து, இல. 1.0 தொடக்கம் 2.9 வரை முதலாம் பக்கத்திலும், இல. 2.10 தொடக்கம் 5.2 வரை இரண்டாம் பக்கத்திலும், எஞ்சிய பகுதிகள் அடுத்த பக்கங்களிலும் இருக்குமாறு தமது விண்ணப்பப் படிவத்தைத் தயாரிப்பதை விஷேடமாகக் கவனத்திற் கொள்ளவும், விண்ணப்பப் படிவங்களை தமது கையெழுத்தில் அல்லது கணினியில்/ தட்டச்சு இயந்திரத்தில் தட்டச்சு செய்து தயாரித்துக் கொள்ளலாம். விண்ணப்பப்படிவம் பரீட்சார்த்தியின் கையெழுத்தினால் நிரப்பப்பட்டிருத்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும், பூரணமற்ற விதத்தில் தகவல்கள் வழங்கப்பட்டுள்ள விண்ணப்பங்களும் எந்தவொரு அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக உள்ளதா? என்பதை பரீட்சித்துப் பார்ப்பது விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். (விண்ணப்பப் படிவத்தின் நிழற் பிரதியொன்றை விண்ணப்பதாரிகள் தம் வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்).

8.2 விண்ணப்பப் படிவம், பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்தில் தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

8.3 சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை, தமது திணைக்களத் தலைவர் ஊடாக 2020 ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு,

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்புக் (தாபன மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள்) கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
த.பெ. இல. 1503,
கொழும்பு.

எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் இடப்படுகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை -2019 (2020)" என தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவங்களைத் தயாரிக்கும் போது, இவ் அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய, அதன் தலைப்பை, சிங்கள மொழிமூல விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழிமூல விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படுவது கட்டாயமாகும்.

8.4 எழுத்துமூலப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரி வகித்த பதவி, சேவை நிலையம் முதலான விபரங்கள் பரீட்சையுடன் தொடர்புடைய எல்லா நடவடிக்கைகளுக்கும் பொருந்தும் என்பதுடன், இவற்றில் பின்னர் ஏற்படக் கூடிய மாற்றங்கள் தொடர்பில் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

8.5 விண்ணப்பப் படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பம், அரசாங்கப் பாடசாலை அதிபர்/ சமாதான நீதவான்/ சத்தியப் பிரமாண ஆணையாளர்/சட்டத்தரணி/பகிரங்க நொத்தாரிசு/முப்படையைச் சேர்ந்த அதிகார ஆணை பெற்ற உத்தியோகத்தர்/பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது அரசாங்க சேவையில் நிரந்தர பதவியொன்றை வகிக்கும் பதவிநிலை உத்தியோகத்தர் ஆகியோருள் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

8.6 எல்லா விதத்திலும் பரிபூரணமாக இல்லாத விண்ணப்பங்கள் எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தபாலில் காணாமல் போகும் அல்லது பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் தொடர்பில் செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

8.7 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. இவ் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் மட்டும் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற ஊகத்தின் அடிப்படையில், எல்லா விதத்திலும் பரிபூரணமான விண்ணப்பங்களை அனுப்பிய விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டவுடன் அதனை அறிவிக்கும் வகையில், பரீட்சைகள் திணைக்களத்தினால் பத்திரிகையில் அறிவித்தலொன்று பிரசுரிக்கப்படும். இவ் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு இரண்டு (02) அல்லது மூன்று (03) நாட்கள் கடந்ததன் பின்பும் தமக்குரிய அனுமதி அட்டைகள் கிடைக்கா விட்டால், அவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அதனை அறிவித்தல் வேண்டும். இவ்வாறு அறிவிக்கும் போது, விண்ணப்பதாரி தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் முகவரி ஆகிய விபரங்களை தெளிவாகவும், சரியாகவும் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பிடத்தைக் கொண்டவராக இருப்பின், தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியொன்றை அனுப்புவதற்கு வசதியாக, மேற்சொன்ன விபரங்களுடன் தொலைநகல் இலக்கமொன்றையும் குறிப்பிட்டு, தமது கோரிக்கைக் கடிதத்தை குறித்த பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்தினூடாக பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்புவதன் மூலம் விசாரிப்பது சாலச் சிறந்ததாக அமையும். மேலும், பரீட்சைகள் திணைக்களத்தினால் கேட்கப்படுகின்ற ஏதேனும் விபரமொன்றை உறுதிப்படுத்தும் வகையில், விண்ணப்பதாரி ஏற்கனவே தம்வசம் வைத்துக் கொண்ட விண்ணப்பப் படிவத்தின் நிழற் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டின் நிழற் பிரதி, விண்ணப்பப் படிவத்தை பதிவுத் தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டு ஆகிய ஆவணங்களைத் தயார் நிலையில் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.

9. **பரீட்சைக்குத் தோற்றுதல்:**

9.1 பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டை விநியோகிக்கப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு மட்டும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படும். பரீட்சைத் தினத்தன்று பரீட்சை அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்பட மாட்டாது.

9.2 பரீட்சார்த்திகள், தமக்கு விதிக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தமது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பரீட்சை அனுமதி அட்டையை, குறித்த பரீட்சை மண்டபத்தின் பரீட்சை மேற்பார்வையாளரிடம் முதலாவது நாளிலேயே கையளித்தல் வேண்டும். பொதுவாக பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும், அறிவுறுத்தல்களும் இவ் வர்த்தமானியின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**குறிப்பு:** பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதி அட்டையொன்றை விநியோகிப்பதானது, அப் பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்கும் அல்லது பதவியொன்றை வகிப்பதற்கும் தேவையான எல்லாத் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்பதாக கருதப்பட மாட்டாது.

*10.* **பரீட்சார்த்தியின் ஆள் அடையாளம்**:

பரீட்சார்த்தியானவர் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்து பரீட்சை மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்களுள் ஏதேனும் ஒன்று ஏற்றுக் கொள்ளப்படும்.

(i) ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை.

(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

(iii) செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

அத்துடன், பரீட்சார்த்திகள் தமது அடையாளத்தை நிரூபிக்கக் கூடியவாறு, தமது முகத்தையும், காதுகளையும் மூடாது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தல் வேண்டும். இவ்வாறு தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதை நிராகரிக்கும் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்த வேளை தொடக்கம் பரீட்சை முடிந்து மண்டபத்திலிருந்து வெளியேறும் வரை, பரீட்சை அதிகாரிகளுக்கு பரீட்சார்த்திகளை எளிதில் அடையாளம் காணக் கூடியவாறு, பரீட்சார்த்திகள் தமது முகத்தையும், காதுகளையும் மூடாது இருத்தல் வேண்டும்.

*11.* **பொய்யான தகவல்களை வழங்குதல்**:

விண்ணப்பப் படிவத்தைப் பூரணப்படுத்தும் போது அதிக கவனம் செலுத்தி மிகச் சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இப் பரீட்சையின் சட்ட திட்டங்களுக்கு அமைய எவரேனும் பரீட்சார்த்தியொருவர் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்யவில்லை எனத் தெரிய வரும் பட்சத்தில், பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அப் பரீட்சார்த்தியின் அபேட்சகத்துவம் இரத்துச் செய்யப்படலாம்.

*12.* இவ் அறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயங்கள் தொடர்பில் குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு நடவடிக்கை எடுக்கப்படும்.

*13.* **பரீட்சையை நடாத்துதல்**:

*13.1* இப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடாத்தப்படும்.

*13.2* பரீட்சார்த்தி ஆகக் கூடிய கல்வித் தகைமையைப் பெற்றுக் கொண்ட மொழியில் அல்லது ஏதேனுமொரு அரசகரும மொழியிலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

*13.3* பரீட்சார்த்தி தகைமை பெற்ற பட்டத்தின் பாடங்களை, இரண்டு மொழிகளில் அல்லது அதற்குக் கூடிய மொழிகளில் சித்தியெய்தி இருப்பின், அப் பட்டத்தில் அப் பரீட்சார்த்தி சித்தியெய்திய பாடங்களுள் கூடிய பாடங்களுக்குத் தோற்றிய மொழியில் அல்லது ஏதேனுமொரு அரசகரும மொழியிலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

*13.4* பிரதான பாடம் ஒரு மொழியிலும், மேலதிக பாடம் மற்றொரு மொழியிலும் சித்தியெய்தியுள்ள விசேட பட்டமொன்றைப் பெற்றுள்ள பரீட்சார்த்தியொருவர், பிரதான பாடத்தில் சித்தியெய்திய மொழியில் அல்லது ஏதேனுமொரு அரசகரும மொழியிலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

**குறிப்பு**:

(i) மேலே பந்தி *13.3* இல் காட்டப்பட்ட "தகைமை பெற்ற பட்டம்" எனும் பதம் பந்தி *6.2*(ii) இல் காட்டப்பட்ட தகைமையாகும்.

(ii) பரீட்சார்த்தி தாம் பரீட்சைக்குத் தோற்றும் ஆங்கில மொழி வினாத்தாள் தவிர, உளச்சார்பும், பொது அறிவும் மற்றும் கணினி விஞ்ஞானம் தொடர்பான அடிப்படை அறிவு ஆகிய இரண்டு வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் விடை அளித்தல் வேண்டும்.

(iii) தாம் விண்ணப்பிக்கும் போது குறிப்பிட்ட பரீட்சை மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு பரீட்சார்த்திக்கு இடமளிக்கப்பட மாட்டாது.

*14.* **ஆட்சேர்ப்பு நடைமுறை:**

*14.1 எழுத்துமூலப் பரீட்சை:*

*கீழ்க் காட்டப்பட்ட பாடங்களைக் கொண்ட மூன்று (03) வினாத் தாள்களைக் கொண்டதாக எழுத்துமூலப் பரீட்சை நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் இந்த எல்லாப் பாடங்களுக்கும் தோற்றுதல் வேண்டும். பரீட்சை நடாத்தப்படும் பாடங்களும், அந்தந்தப் பாடத்தில் சித்தியெய்துவதற்காகப் பெற்றுக் கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகளும் வருமாறு:*

| பாட இல. | பாடம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியெய்துவதற்காகப் பெற்றுக் கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள் | காலம் (மணித்தியாலங்கள்) |
|---|---|---|---|---|
| 01 | உளச்சார்பும், பொது அறிவும் | 100 | 40 | 2 |
| 02 | ஆங்கில மொழி | 100 | 40 | 2 |
| 03 | கணினி விஞ்ஞானம் தொடர்பான அடிப் படை அறிவு | 100 | 40 | 1 |

*14.2 பொதுவான நேர்முகப் பரீட்சை:*

(i) மேலே பந்தி 6 இல் காட்டப்பட்ட ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்கான தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதை பரீட்சிப்பதற்காக பொதுவான நேர்முகப் பரீட்சை நடாத்தப்படுகின்றது. இப் பொதுவான நேர்முகப் பரீட்சைச் சபை திணைக்களத் தலைவரினால் நியமிக்கப்படும்.

(ii) அந்தந்தப் பாடத்திற்காக ஆகக் குறைந்தது நாற்பது வீதம் (40%) அல்லது அதற்குக் கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட பரீட்சார்த்திகளுள், எல்லாப் பாடங்களுக்கும் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் கூட்டுத் தொகைக்கு அமைய, ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்டோர் பொதுவான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதி பெறுகின்றனர். இவ்வாறு தகைமை பெற்ற விண்ணப்பதாரிகளுள், எழுத்து மூலப் பரீட்சையில் அவர்கள் பெற்றுக் கொண்ட மொத்தப் புள்ளிகளின் திறன் ஒழுங்குவரிசைப்படி, ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ள எண்ணிக்கையைப் போன்று இரு மடங்கு விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ள எண்ணிக்கையைப் போன்று இரு மடங்கு எண்ணிக்கையானோர் இல்லாத சந்தர்ப்பத்தில், நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெற்ற விண்ணப்பதாரிகள் அழைக்கப்படுவர்.

**கவனிக்கவும்:** நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதானது, நியமனம் வழங்குவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பதாகக் கருதப்பட மாட்டாது.

*14.3* வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய, எல்லாத் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் எழுத்து மூலப் பரீட்சையில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் "ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரி தொடக்கம் திறன் ஒழுங்கு வரிசைப்படி" இப் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

*14.4 பரீட்சைப் பெறுபேறுகள்:*

இவ் வர்த்தமானி அறிவித்தலில் பந்தி 14.1 இல் காட்டப்பட்டுள்ளவாறு, பரீட்சார்த்திகள் எழுத்து மூலப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பரீட்சைப் பெறுபேற்று அட்டவணை குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்திடம் பெற்றுக் கொடுக்கப்படும். அத்துடன் பரீட்சைக்குத் தோற்றிய எல்லாப் பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சைப் பெறுபேறுகள் தனிப்பட்ட முறையில் அனுப்பி வைக்கப்படும் அல்லது www.results.exams.gov.lk எனும் இணையத்தளத்தில் பகிரங்கப்படுத்தப்படும். எழுத்து மூலப் பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்ட திட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுகின்றனர். அச் சட்ட திட்டங்களை மீறும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனையொன்றிற்கு உள்ளாவதற்கு பரீட்சார்த்திக்கு நேரிடும்.

*15.* **எழுத்துமூலப் பரீட்சைக்கான பாடத்திட்டம்:**

*01* உளச்சார்பும், பொது அறிவும் - காலம்: 02 மணித்தியாலம், புள்ளிகள்: 100

***பகுதி 1 -உளச்சார்பு***

பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியாக சிந்திக்கும் ஆற்றல், கணித அடிப்படையிலான திறன், கிரகிக்கும் ஆற்றல், தீர்மானம் எடுக்கும் ஆற்றல் என்பவற்றைச் சோதிப்பதற்கான வினாத்தாள் ஆகும்.

*பகுதி 2 -பொது அறிவு*

இலங்கையின் அண்மைக்கால சமூக, பொருளாதார, அரசியல் ரீதியான தகவல்கள், உலக அரசியல், விஞ்ஞான, தொழில்நுட்ப அறிவு, புதிய விஞ்ஞான கண்டுபிடிப்புகள் முதலானவற்றை நோக்காகக் கொண்ட குறுகிய மற்றும்/ அல்லது பல்தேர்வு வினாக்கள் அடங்கிய வினாத்தாள் ஆகும்.

02 ஆங்கில மொழி - காலம்: 02 மணித்தியாலம், புள்ளிகள்: 100

வாசிப்பு மூலம் கிரகித்துக் கொள்ளல், கருத்துகளை வெளியிடல் மற்றும் தொடர்பாடல் திறன் என்பவற்றைச் சோதிப்பதற்கான வினாத்தாள் ஆகும்.

03 கணினி விஞ்ஞானம் தொடர்பான அடிப்படை அறிவு - காலம்: 01 மணித்தியாலம், புள்ளிகள்: 100

கணினி தொடர்பான அடிப்படை அறிவு, Ms Word, Ms Excel போன்ற மென்பொருள்களின் பாவனை, Internet, e-mail பாவனை என்பன தொடர்பில் பரீட்சார்த்தியின் அறிவைச் சோதிப்பதற்கான வினாத்தாள் ஆகும்.

16. இங்கு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய வர்த்தமானி அறிவித்தல்களுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படும் பட்சத்தில் அல்லது பொருந்தாத சந்தர்ப்பங்களில் சிங்கள மொழியிலான அறிவித்தல் மேலோங்கி நிற்கும் என்பதுடன், அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழியிலான அறிவித்தலுக்கு அமைய செயற்படுதல் வேண்டும்.

யூ.வீ. சரத் ரூப்பசிறி
குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம்
குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்
"சுகுறுபாயா"
ஸ்ரீ சுபூத்திபுர வீதி,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2019 (2020)**

Limited Competitive Examination for Recruitment to Grade II of the Post of Authorized Officer – 2019 (2020)

1. மொழி மூலம் (கூண்டினுள் உரிய இலக்கத்தை எழுதுக)

| மொழிமூலம் | இலக்கம் |
|---|---|
| சிங்களம் | 2 |
| தமிழ் | 3 |
| ஆங்கிலம் | 4 |

(பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்துதல் வேண்டும்)

2. பிரத்தியேக தகவல்கள் :

2.1 முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துகளில்): ..........................................................................................
..........................................................................................................................................................
(உதாரணம்: HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDANA)

2.2 முதலெழுத்துக்களை இறுதியில் குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துகளில்): ................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................
(உதாரணம்: GUNAWARDANA, H.M.S.K.)

2.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்): ..........................................................................................................................
..........................................................................................................................................................................

2.4 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்): ...................................................................................................
..........................................................................................................................................................................

2.5 பரீட்சை அனுமதி அட்டையை அனுப்ப வேண்டிய முகவரி

i. (ஆங்கில பெரிய எழுத்துகளில்): ..................................................................................................................
..........................................................................................................................................................................

ii. (சிங்களத்தில்/தமிழில்): ..........................................................................................................................
..........................................................................................................................................................................

2.6 பால் (கூண்டினுள் உரிய இலக்கத்தை எழுதுக):

ஆண் – 0
பெண் – 1 ☐

2.7 இனம் (கூண்டினுள் உரிய இலக்கத்தை எழுதுக): ☐

சிங்களவர் – 1
தமிழர் – 2
இந்தியத் தமிழர் – 3
முஸ்லிம் – 4
பிற – 5

2.8 தேசிய ஆள் அடையாள அட்டை இல.: ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

2.9 கையடக்கத் தொலைபேசி இல.: ☐☐☐☐☐☐☐☐☐☐

2.10 பிறந்த திகதி:
ஆண்டு: ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி: ☐☐

2.11 தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டிய இறுதித் திகதியாகிய 2020, ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதிக்கு வயது:
வருடங்கள்: ☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள்: ☐☐

3.

3.1 நீங்கள் 2020, ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதியன்று இருக்கும் சேவையில் இணைவதற்கு தகைமை பெற்ற பரீட்சையில் சித்தியடைந்த/நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்த மொழி மூலத்தைக் குறிப்பிடுக ..................................

3.2 நீங்கள் இவ் வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 6 இல் காட்டப்பட்டுள்ள எல்லாத் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளீரா?
.............................................................

3.3 நீங்கள் அதில் காட்டப்பட்டுள்ள எப் பிரிவின் கீழ் தகுதி பெறுகின்றீர்கள்? ..........................................
(பந்தி 6.2 (i) இன் கீழ்/பந்தி 6.2 (ii) இன் கீழ்)

4. கல்வித் தகைமைகள்:

4.1 பட்டம் தொடர்பான தகவல்கள்

i. பட்டம் பெற்ற திகதி : ...............................................................................................
ii. பல்கலைக்கழகம்/கல்வி நிறுவகம் : ...............................................................................................
iii. பதிவிலக்கம் : ...............................................................................................
iv. உள்வாரியா/வெளிவாரியா என்பது : ...............................................................................................

v. பட்டம் : ..........................................................................................
vi. பாடங்கள்/பாடத்துறை : ..........................................................................................
vii. பரீட்சைச் சுட்டெண் : ..........................................................................................
viii. பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலம் : ..........................................................................................

4.2 க.பொ.த. (உ.த.) பரீட்சை

i. சித்தியெய்திய வருடம்: ..........................................................................................
ii. பரீட்சைச் சுட்டெண்: ..........................................................................................
iii. பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலம்: ..........................................................................................
iv. பெற்றுக் கொண்ட சித்திகள்: 1. .............................................. 2. ..............................................
3. .............................................. 4. ..............................................

4.3 க.பொ.த. (சா.த.) பரீட்சை

i. சித்தியெய்திய வருடம்: ..........................................................................................
ii. பரீட்சைச் சுட்டெண்: ..........................................................................................
iii. பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலம்: ..........................................................................................
iv. பெற்றுக் கொண்ட சித்திகள்: 1. .............................................. 2. ..............................................
3. .............................................. 4. ..............................................
5. .............................................. 6. ..............................................
7. .............................................. 8. ..............................................
9. .............................................. 10. ..............................................

5. உடற் தகைமைகள்:

5.1 உயரம்:
............ அடி, ............ அங்குலம் அல்லது ..................... சென்றி மீற்றர்

5.2 மார்புச் சுற்றளவு (பெண் விண்ணப்பதாரிகளுக்கு ஏற்புடையதாகாது):
............ அடி, ............ அங்குலம் அல்லது ..................... சென்றி மீற்றர்

6. சேவை அனுபவம்:

6.1 தற்போது வகிக்கும் பதவி : ..........................................................................
6.2 வகுப்பு/தரம் : ..........................................................................
6.3 பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி: ..........................................................................
6.4 பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி: ..........................................................................
6.5 சம்பளக் குறியீட்டு இலக்கமும் சம்பள அளவுத் திட்டமும்: ..........................................................
6.6 இப் பதவி மத்திய அரசுக்கு உரியதா? மாகாண அரசுக்கு உரியதா? என்பது: ..............................
6.7 விண்ணப்பிப்பதற்காக தகுதி பெறுவதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட செயலூக்க சேவைக் காலங்கள் ஏற்புடையதாக இருப்பின் அச் சேவைக் காலங்கள் தொடர்பான விபரங்கள்:

| | சேவை/பதவி/தரம் | சம்பளக் குறியீட்டு இல. | நியமிக்கப்பட்ட திகதி |
|---|---|---|---|
| (i) | .................................................. | .................................................. | .............................................. |
| (ii) | .................................................. | .................................................. | .............................................. |
| (iii) | .................................................. | .................................................. | .............................................. |
| (iv) | .................................................. | .................................................. | .............................................. |

6.8 இவ் வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 6.2 இல் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் 2020, ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதிக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியொன்றில் அல்லது பதவிகளில் சேவையில் ஈடுபட்டிருந்த மொத்த சேவைக் காலம்: ..............................

7. பரீட்சைக் கட்டணம்:

i. செலுத்தப்பட்ட தபால்/உப தபால் அலுவலகம் : ..................................................................................
ii. செலுத்திய தொகை : ..................................................................................
iii. செலுத்திய திகதி : ..................................................................................
iv. பற்றுச்சீட்டு இல. : ..................................................................................

| |
|---|
| பற்றுச்சீட்டின் ஓர் ஓரமாக வேறாகாதவாறு இங்கே ஒட்டவும்<br>பற்றுச்சீட்டின் நிழற் பிரதியொன்றை தம் வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும். |

8. விண்ணப்பதாரியின் உறுதியுரை:

விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதிக்கு, இவ் வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 6 இன் பிரகாரம் பூர்த்தி செய்திருக்க வேண்டிய எல்லாத் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளேன் எனவும், எந்தவொரு ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் (எச்சரித்தல் நீங்கலாக) உட்பட்டில்லை என்பதையும் உறுதியுரைக்கின்றேன். அத்துடன் பரீட்சையை நடாத்துவது தொடர்பிலும், பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பிலும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களுக்கு நான் கட்டுப்படுகின்றேன் என்பதையும் உறுதியுரைக்கின்றேன்.

வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா சட்ட திட்டங்களுக்கும் ஏற்ப, மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நான் தகுதியுடையேன் எனவும், இங்கு என்னால் தரப்பட்டுள்ள எல்லா தகவல்களும் எனது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டியவரை உண்மையானதும் சரியானதுமென உறுதியுரைக்கின்றேன். அத்துடன் பரீட்சை சட்ட திட்டங்களுக்கு ஏற்ப செயற்படுவதற்கும், இப் பரீட்சை தொடர்பான ஏற்பாடுகளுக்கும், நிபந்தனைகளுக்கும் ஏற்ப, நான் இப் பதவிக்கு தகுதியற்றவன் எனத் தெரிய வரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ எனது அபேட்சகத்துவத்தை இரத்துச் செய்வதற்காக எடுக்கப்படுகின்ற தீர்மானத்திற்கும் நான் இணங்குகின்றேன். மேலும், பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்ட திட்டங்களுக்கும் நான் கட்டுப்படுகின்றேன் என்பதையும் உறுதியுரைக்கின்றேன்.

திகதி: ..................................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

9. திணைக்களத் தலைவரின் உறுதியுரை (விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவைக்கு அமைய):

இவ் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி .................................................................................................. .................................................................................. (முழுப் பெயர்) அவர்கள், மத்திய அரசின் கீழுள்ள/ ............................. மாகாண சபையின் கீழுள்ள .................................................................................... அமைச்சில்/ திணைக்களத்தில் .. ........................................... பதவியில் பணியாற்றுகின்றார் என்பதையும், வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 6 இற்கு அமைய தகைமைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய கடைசித் திகதிக்கு ............. (ஐந்து/ பத்து) வருட தொடர்ச்சியான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதையும், எந்தவொரு ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் (எச்சரித்தல் தவிர) உட்படுத்தப்பட்டில்லை என்பதையும், வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு அமைய, இவர் எழுத்துமூலப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக பூர்த்தி செய்திருக்க வேண்டிய எல்லாத் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்பதையும், இவர் எனது முன்னிலையில் 2020 ........... ஆம் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் என்பதையும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்பதையும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

..................................................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்

திகதி :
அத்தாட்சிப்படுத்துபவரின் பெயர் :
பதவி :
முகவரி :
(இறப்பர் முத்திரையை இடவும்)

9-469/1

## குடிவரவு குடியகல்வுத் திணைக்களம்

உள்ளக பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு

### குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் வெளிக்கள/அலுவலக முறைப்பட்ட - தொகுதி 2 சேவை வகுதியைச் சேர்ந்த அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2019 (2020)

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு, கீழ்க் காணும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. இவ் அறிவித்தலில் "திணைக்களத் தலைவர்" எனும் பதம் குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் எனப் பொருள்படும். இத் திறந்த போட்டிப் பரீட்சை மூலம், குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதுடன், வேறு விதத்தில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டில்லாத சந்தர்ப்பங்களில் "பதவி" எனும் பதம் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் தரம் II எனப் பொருள்படும்.

2. இப் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதி 2020, ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி ஆகும்.

   2.1 எழுத்து மூலப் பரீட்சை: இப் பரீட்சை கீழ்க் காட்டப்பட்டவாறு மூன்று (03) வினாத் தாள்களைக் கொண்டதாகும்.

   01. உளச்சார்பும், பொது அறிவும்.
   02. ஆங்கில மொழி.
   03. கணினி விஞ்ஞானம் தொடர்பான அடிப்படை அறிவு.

   2.2 பரீட்சைத் திகதி: இப் பரீட்சை 2020 திசெம்பர் மாதம் கொழும்பில் நடைபெறும். இப் பரீட்சையை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச் செய்யும் தத்துவம் குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு உண்டு.

   2.3 நேர்முகப் பரீட்சை:

   (i) நிலவும் வெற்றிடங்களுள் 10% வீதம் மட்டும் பெண் விண்ணப்பதாரிகளுக்காக ஒதுக்கப்படும்.

   (ii) குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைச் சபையினால், எழுத்து மூலப் பரீட்சைக்குத் தோற்றி, ஒவ்வொரு வினாத் தாளுக்கும் ஆகக் குறைந்தது 40% வீத புள்ளிகளை அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகளிலிருந்து, நிலவும் வெற்றிடங்களைப் போன்று இரு மடங்காக இருக்குமாறு, மேலே (i) இல் காட்டப்பட்ட அடிப்படைக்கு அமைவாக "ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகள்" நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். (இந் நேர்முகப் பரீட்சை தகைமைகளைப் பரீட்சிப்பதற்காக மட்டுமே நடாத்தப்படும்).

   (iii) நேர்முகப் பரீட்சையின் போது கீழே பந்தி 6.3 இன் கீழ் காட்டப்பட்டுள்ள உடல், உளத் தகைமைகள் பரீட்சிக்கப்படும்.

3. இப் பதவிக்கு நியமிக்கப்படுகின்ற பதவிகளின் எண்ணிக்கை பதினைந்து (15) ஆகும். இறுதியாக நிலவும் வெற்றிடத்திற்கு அல்லது வெற்றிடங்களுக்கு, சமமான புள்ளிகளைப் பெற்று, நிலவும் வெற்றிடங்களையும் தாண்டி விண்ணப்பதாரிகள் இருக்கின்ற சந்தர்ப்பத்தில், அவ் வெற்றிடத்தை/ வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பில் குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்பதுடன், இவ் ஆட்சேர்ப்பு நியமனம் அமுலுக்கு வரும் திகதியும் குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தினாலேயே தீர்மானிக்கப்படும்.

4. **சேவை நிபந்தனைகள்:**

   4.1 அரசாங்க சேவை நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகளுக்கும், தாபனவிதிக் கோவை ஏற்பாடுகளுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும், 2009.02.20 ஆம் திகதிய 1589/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழு நடவடிக்கைமுறை விதிகளுக்கும், 2013.12.20 ஆம் திகதியுடையதாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் வெளிக்கள/ அலுவலக முறைப்பட்ட -தொகுதி 2 சேவை வகுதியைச் சேர்ந்த அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் தரம் II பதவிக்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறையிலுள்ள நியதிகளுக்கும், நிபந்தனைகளுக்கும், அவ் ஆட்சேர்ப்பு நடைமுறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள

அல்லது மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களுக்கும் கட்டுப்பட்டு, தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு நியமிக்கப்படுவர்.

4.2 இப் பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமாகும். புதிய நியமனதாரிகளுக்கான ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படுகின்ற கொள்கைத் தீர்மானங்களுக்கு நியமனதாரிகள் கட்டுப்படுதல் வேண்டும்.

4.3 இந் நியமனம் மூன்று (03) வருட தகுதிகாண் காலத்திற்குக் கட்டுப்பட்டதாகும். அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு நியமிக்கப்பட்டு மூன்று (03) வருட காலப்பகுதிக்குள், ஆட்சேர்ப்பு நடைமுறையில் காட்டப்பட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்.

4.4 01/2014 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையினதும், அதனுடன் இணைந்த சுற்றறிக்கைகளினதும் பிரகாரம், சேவையில் இணைந்து 05 வருட காலப்பகுதிக்குள் உரிய மட்டத்திற்குரிய அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

5. **இப் பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம்**:

2016.02.25 ஆம் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் அட்டவணை I இற்கு அமைய இப் பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் ரூ. 34,605.00 -10×660 -11×755 -15×930 - ரூ. 63,460 (MN-5/2016) ஆகும். அச் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய, அதில் அட்டவணை II இற்கு அமையவே சம்பளம் செலுத்தப்படும். இதற்கு மேலதிகமாக அரச உத்தியோகத்தர்களுக்கு அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் வழங்கப்படுகின்ற பிற கொடுப்பனவுகளும் இவ் உத்தியோகத்தர்களுக்கும் உரித்தாகும்.

6. **ஆட்சேர்ப்பிற்கான தகைமைகள்**:

6.1 (i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(ii) சிறந்த நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.
(iii) தீவின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும், இப் பதவியில் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல், உள தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

6.2 கல்வித் தகைமைகள்:

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் "பட்டம் அளிப்பதற்கான நிறுவனமொன்றாக" அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் அளிக்கப்பட்ட பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

மற்றும்

(ii) க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கில மொழிக்கு திறமைச் சித்தி பெற்றிருத்தல்.

**குறிப்பு**: பட்டம் பெற்ற திகதியும், க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கில மொழிக்கு திறமைச் சித்தி பெற்றுக் கொண்ட திகதியும், தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டிய இறுதித் திகதியான 2020 ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி அல்லது அதற்கு முந்திய திகதியாக இருத்தல் வேண்டும்.

6.3 உடற் தகைமைகள்:

(i) விண்ணப்பதாரிகளின் உயரம் ஆகக் குறைந்தது 5 அடி 4 அங்குலம் (162.5 செ.மீ.) ஆகவும், மார்புச் சுற்றளவு 32 அங்குலம் (81.25 செ.மீ.) ஆகவும் இருத்தல் வேண்டும்.

(ii) பெண் விண்ணப்பதாரிகளின் உயரம் ஆகக் குறைந்தது 5 அடி 2 அங்குலம் (156 செ.மீ.) ஆக இருத்தல் வேண்டும்.

6.4 வயதெல்லை:

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு இருபத்தொரு (21) வயதுக்குக் குறையாமலும், முப்பத்தைந்து (35) வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். அதற்கமைய, 1999, ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னரும், 1985, ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னரும் பிறந்த விண்ணப்பதாரிகளுக்கு மட்டும் இப் பதவிக்கு விண்ணப்பிக்க தகுதியுடையோர் ஆவார்.

7. **பரீட்சைக் கட்டணம்:**

பரீட்சைக் கட்டணம் ரூபா அறுநூறு (ரூ. 600/-) ஆகும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற இறுதித் திகதிக்கு முன்னர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் 20-03-02-13 எனும் வருமானத் தலைப்பிற்கு வரவு வைக்கும் வகையில், தீவின் எந்தவொரு தபால்/உபதபால் அலுவலகத்திலும் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தலாம். இப் பரீட்சைக் கட்டணத்திற்கு மேலதிகமாக வேறு எந்தவொரு கட்டணமும் அறவிடப்பட மாட்டாது. பணம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டில் ஒட்டுதல் வேண்டும். எக் காரணம் கொண்டும் இப் பரீட்சைக் கட்டணம் திருப்பிச் செலுத்தப்படவோ அல்லது பிறிதொரு பரீட்சைக்காக மாற்றப்படவோ மாட்டாது. பரீட்சைக் கட்டணம் சார்பில் காசுக் கட்டளை அல்லது முத்திரை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. (பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை விண்ணப்பதாரிகள் தம் வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்).

8. **விண்ணப்பிக்கும் முறை:**

8.1 இவ் அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக, 8½"x12" அளவிலான கடதாசியின் (A4) இரு பக்கங்களையும் பாவித்து, இல. 1.0 தொடக்கம் 2.9 வரை முதலாம் பக்கத்திலும், இல. 2.10 தொடக்கம் 7.0 வரை இரண்டாம் பக்கத்திலும், எஞ்சிய பகுதிகள் அடுத்த பக்கத்திலும் இருக்குமாறு தமது விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்துக் கொள்ளல் வேண்டும் என்பதுடன், விண்ணப்பப் படிவங்களை தமது கையெழுத்தில் அல்லது கணினியில்/தட்டச்சு இயந்திரத்தில் தட்டச்சு செய்து தயாரித்துக் கொள்ளலாம். விண்ணப்பப் படிவம் பரீட்சார்த்தியின் கையெழுத்தினால் நிரப்பப்பட்டிருத்தல் வேண்டும். தயாரிப்பதை விஷேடமாகக் கவனத்திற் கொள்ளவும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும், பூரணமற்ற விதத்தில் தகவல்கள் வழங்கப்பட்டுள்ள விண்ணப்பங்களும் எந்தவொரு அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக உள்ளதா? என்பதை பரீட்சித்துப் பார்ப்பது விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். (விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றை விண்ணப்பதாரிகள் தம் வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்).

8.2 பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

8.3 சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2020, ஒற்றோபர் 16 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு,

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்புக் (தாபன மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள்) கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
த.பெ. இல. 1503,
கொழும்பு.

எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் இடப்படுகின்ற கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் "அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2019 (2020)" என தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவங்களைத் தயாரிக்கும் போது, இவ் அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்ட மாதிரிப் படிவத்திற்கு அமைய, அதன் தலைப்பை, சிங்கள மொழிமூல விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழிமூல விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படுவது கட்டாயமாகும்.

8.4 விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பம், அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர்/ சமாதான நீதவான்/ சத்தியப் பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி/ பிரசித்த நொத்தாரிசு/ முப்படையைச் சேர்ந்த அதிகார ஆணை பெற்ற உத்தியோகத்தர்/ பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவியொன்றை வகிக்கும் பதவிநிலை உத்தியோகத்தர் ஆகியோருள் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

8.5 எல்லா விதத்திலும் பரிபூரணமாக இல்லாத விண்ணப்பங்கள் எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தபாலில் காணாமல் போகும் அல்லது பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் தொடர்பில் செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

8.6 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. இவ் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் மட்டும் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற ஊகத்தின் அடிப்படையில், எல்லா விதத்திலும் பரிபூரணமான விண்ணப்பங்களை அனுப்பிய விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டவுடன் அதனை அறிவிக்கும் வகையில், பரீட்சைகள் திணைக்களத்தினால் பத்திரிகையில் அறிவித்தலொன்று பிரசுரிக்கப்படும். இவ் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு இரண்டு (02) அல்லது மூன்று (03) நாட்கள் கடந்ததன் பின்பும் தமக்குரிய அனுமதி அட்டைகள் கிடைக்காவிட்டால், அவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அதனை அறிவித்தல் வேண்டும். இவ்வாறு அறிவிக்கும் போது, விண்ணப்பதாரி தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இல., முகவரி ஆகிய விபரங்களை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பிடத்தைக் கொண்டவராக இருப்பின், தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியொன்றை அனுப்புவதற்கு வசதியாக, மேற்சொன்ன விபரங்களுடன் தொலைநகல் இலக்கமொன்றையும் குறிப்பிட்டு, தமது கோரிக்கைக் கடிதத்தை குறித்த பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்தினூடாக பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்புவதன் மூலம் விசாரிப்பது சாலச் சிறந்ததாக அமையும். மேலும், பரீட்சைகள் திணைக்களத்தினால் கேட்கப்படுகின்ற ஏதேனும் விபரமொன்றை உறுதிப்படுத்தும் வகையில், விண்ணப்பதாரி ஏற்கனவே தம் வசம் வைத்துக் கொண்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டின் நிழற் பிரதி, விண்ணப்பப்படிவத்தை பதிவுத் தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டு ஆகிய ஆவணங்களைத் தயார் நிலையில் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.

9. **பரீட்சைக்குத் தோற்றுதல்**:

9.1 பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டை விநியோகிக்கப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு மட்டும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படும். பரீட்சைத் தினத்தன்று பரீட்சை அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்பட மாட்டாது.

9.2 பரீட்சார்த்திகள், தமக்கு விதிக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தமது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பரீட்சை அனுமதி அட்டையை, குறித்த பரீட்சை மண்டபத்தின் பரீட்சை மேற்பார்வையாளரிடம் முதலாவது நாளிலேயே கையளித்தல் வேண்டும். பொதுவாக பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும், அறிவுறுத்தல்களும் இவ் வர்த்தமானியின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**குறிப்பு**: பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதி அட்டையொன்றை விநியோகிப்பதானது, அப் பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்கும் அல்லது பதவியொன்றை வகிப்பதற்கும் தேவையான எல்லாத் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்பதாக கருதப்பட மாட்டாது.

10. **பரீட்சார்த்தியின் ஆள் அடையாளம்**:

பரீட்சார்த்தியானவர் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்து, பரீட்சை மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்களுள் ஏதேனும் ஒன்று ஏற்றுக் கொள்ளப்படும்.

(i) ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை.
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.
(iii) செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

அத்துடன், பரீட்சார்த்திகள் தமது அடையாளத்தை நிரூபிக்கக் கூடியவாறு, தமது முகத்தையும், காதுகளையும் மூடாது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தல் வேண்டும். இவ்வாறு தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதை நிராகரிக்கும் பரீட்சார்த்திகளை பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது. மேலும், பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்த வேளை தொடக்கம் பரீட்சை முடிந்து மண்டபத்திலிருந்து வெளியேறும் வரை, பரீட்சை அதிகாரிகளுக்கு பரீட்சார்த்திகளை எளிதில் அடையாளம் காணக் கூடியவாறு, பரீட்சார்த்திகள் தமது முகத்தையும், காதுகளையும் மூடாது இருத்தல் வேண்டும்.

*11.* **பொய்யான தகவல்களை வழங்குதல்:**

விண்ணப்பப் படிவத்தைப் பூரணப்படுத்தும் போது அதிக கவனம் செலுத்தி மிகச் சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இப் பரீட்சையின் சட்ட திட்டங்களுக்கு அமைய எவரேனும் பரீட்சார்த்தியொருவர் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்யவில்லை எனத் தெரிய வரும் பட்சத்தில், பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ ஆகிய எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அப் பரீட்சார்த்தியின் அபேட்சகத்துவம் இரத்துச் செய்யப்படலாம்.

*12.* இவ் அறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயங்கள் தொடர்பில் குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு நடவடிக்கை எடுக்கப்படும்.

*13.* **பரீட்சையை நடாத்துதல்:**

13.1 இப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடாத்தப்படும்.

13.2 பரீட்சார்த்தி தகைமை பெற்ற பட்டத்தைப் பெற்றுக் கொண்ட மொழியில் அல்லது ஏதேனுமொரு அரசகரும மொழியிலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

13.3 பரீட்சார்த்தி தகைமை பெற்ற பட்டத்தின் பாடங்களை, இரண்டு மொழிகளில் அல்லது அதற்குக் கூடிய மொழிகளில் சித்தியெய்தி இருப்பின், அப்பட்டத்தில் அப்பரீட்சார்த்தி சித்தியெய்திய பாடங்களுள் கூடிய பாடங்களுக்குத் தோற்றிய மொழியில் அல்லது ஏதேனுமொரு அரசகரும மொழியிலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

13.4 பிரதான பாடம் ஒரு மொழியிலும், மேலதிக பாடம் மற்றொரு மொழியிலும் சித்தியெய்தியுள்ள விசேட பட்டமொன்றைப் பெற்றுள்ள பரீட்சார்த்தியொருவர், பிரதான பாடத்தில் சித்தியெய்திய மொழியில் அல்லது ஏதேனுமொரு அரசகரும மொழியிலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

**குறிப்பு:**

(i) மேலே பந்தி 13.2 இலும், 13.3 இலும் காட்டப்பட்ட "தகைமை பெற்ற பட்டம்" எனும் பதம் பந்தி 6.2(i) இல் காட்டப்பட்ட தகைமையாகும்.

(ii) பரீட்சார்த்தி தாம் பரீட்சைக்குத் தோற்றும் ஆங்கில மொழி வினாத்தாள் தவிர, உளர்சார்பும், பொது அறிவும் மற்றும் கணினி விஞ்ஞானம் தொடர்பான அடிப்படை அறிவு ஆகிய இரண்டு வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் விடை அளித்தல் வேண்டும்.

(iii) தாம் விண்ணப்பிக்கும் போது குறிப்பிட்ட பரீட்சை மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு பரீட்சார்த்திக்கு இடமளிக்கப்பட மாட்டாது.

*14.* **ஆட்சேர்ப்பு நடைமுறை:**

14.1 எழுத்துமூலப் பரீட்சை

கீழ்க் காட்டப்பட்ட பாடங்களைக் கொண்ட மூன்று (03) வினாத் தாள்களைக் கொண்டதாக எழுத்துமூலப் பரீட்சை நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் இந்த எல்லாப் பாடங்களுக்கும் தோற்றுதல் வேண்டும். பரீட்சை நடாத்தப்படும் பாடங்களும், அந்தந்தப் பாடத்தில் சித்தியெய்துவதற்காகப் பெற்றுக் கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகளும் வருமாறு:

| பாட இல. | பாடம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியெய்துவதற்காகப் பெற்றுக் கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள் | காலம் (மணித்தியாலங்கள்) |
|---|---|---|---|---|
| 01 | உளச்சார்பும், பொது அறிவும் | 100 | 40 | 2 |
| 02 | ஆங்கில மொழி | 100 | 40 | 2 |
| 03 | கணினி விஞ்ஞானம் தொடர்பான அடிப் படை அறிவு | 100 | 40 | 1 |

14.2 பொதுவான நேர்முகப் பரீட்சை

(i) மேலே பந்தி 6 இல் காட்டப்பட்ட ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்கான தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா? என்பதைப் பரீட்சிப்பதற்காக பொதுவான நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். இப் பொதுவான நேர்முகப் பரீட்சைச் சபை திணைக்களத் தலைவரினால் நியமிக்கப்படும்.

(ii) அந்தந்தப் பாடத்திற்காக ஆகக் குறைந்தது நாற்பது (40%) அல்லது அதற்குக் கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட பரீட்சார்த்திகளுள், எல்லாப் பாடங்களுக்கும் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் கூட்டுத் தொகைக்கு அமைய, ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்டோர் பொதுவான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதி பெறுகின்றனர். இவ்வாறு தகைமை பெற்ற விண்ணப்பதாரிகளுள், எழுத்து மூலப் பரீட்சையில் அவர்கள் பெற்றுக் கொண்ட மொத்தப் புள்ளிகளின் திறன் ஒழுங்குவரிசைப்படி, ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ள எண்ணிக்கையைப் போன்று இரு மடங்கு விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ள எண்ணிக்கையைப் போன்று இரு மடங்கு எண்ணிக்கையானோர் இல்லாத சந்தர்ப்பத்தில், நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெற்ற விண்ணப்பதாரிகள் அழைக்கப்படுவர்.

**கவனிக்கவும்**: நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதானது, நியமனம் வழங்குவதற்கான தகைமையைப் பூர்த்தி செய்திருப்பதாகக் கருதப்பட மாட்டாது.

14.3 வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய, எல்லாத் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் எழுத்து மூலப் பரீட்சையில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் "ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரி தொடக்கம் திறன் ஒழுங்கு வரிசைப்படி" இப் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

14.4 பரீட்சைப் பெறுபேறுகள்

இவ் வர்த்தமானி அறிவித்தலில் பந்தி 14.1 இல் காட்டப்பட்டுள்ளவாறு, பரீட்சார்த்திகள் எழுத்து மூலப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பரீட்சைப் பெறுபேற்று அட்டவணை குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்திடம் பெற்றுக் கொடுக்கப்படும். அத்துடன் பரீட்சைக்குத் தோற்றிய எல்லாப் பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சைப் பெறுபேறுகள் தனிப்பட்ட முறையில் அனுப்பி வைக்கப்படும். அல்லது www.results.exams.gov.lk எனும் இணையத்தளத்தில் பகிரங்கப்படுத்தப்படும். எழுத்து மூலப் பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்ட திட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுகின்றனர். அச் சட்ட திட்டங்களை மீறும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனையொன்றிற்கு உள்ளாவதற்கு பரீட்சார்த்திக்கு நேரிடும்.

15. **எழுத்துமூலப் பரீட்சைக்கான பாடத்திட்டம்**:

01 உளச்சார்பும், பொது அறிவும் - காலம்: 02 மணித்தியாலம், புள்ளிகள்: 100

***பகுதி 1 -உளச்சார்பு***

பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியாக சிந்திக்கும் ஆற்றல், கணித அடிப்படையிலான திறன், கிரகிக்கும் ஆற்றல், தீர்மானம் எடுக்கும் ஆற்றல் என்பவற்றைச் சோதிப்பதற்கான வினாத்தாள் ஆகும்.

***பகுதி 2 -பொது அறிவு***

இலங்கையின் அண்மைக்கால சமூக, பொருளாதார, அரசியல் ரீதியான தகவல்கள், உலக அரசியல், விஞ்ஞான, தொழில்நுட்ப அறிவு, புதிய விஞ்ஞான கண்டுபிடிப்புகள் முதலானவற்றை நோக்காகக் கொண்ட குறுகிய மற்றும்/ அல்லது பல்தேர்வு வினாக்கள் அடங்கிய வினாத்தாள் ஆகும்.

02 ஆங்கில மொழி - காலம்: 02 மணித்தியாலம், புள்ளிகள்: 100

வாசிப்பு மூலம் கிரகித்துக் கொள்ளல், கருத்துகளை வெளியிடல் மற்றும் தொடர்பாடல் திறன் என்பவற்றைச் சோதிப்பதற்கான வினாத்தாள் ஆகும்.

03 கணினி விஞ்ஞானம் தொடர்பான அடிப்படை அறிவு - காலம்: 01 மணித்தியாலம், புள்ளிகள்: 100

கணினி தொடர்பான அடிப்படை அறிவு, MS Word, MS Excel போன்ற மென்பொருள்களின் பாவனை, Internet, e-mail பாவனை என்பன தொடர்பில் பரீட்சார்த்தியின் அறிவைச் சோதிப்பதற்கான வினாத்தாள் ஆகும்.

16. இங்கு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய வர்த்தமானி அறிவித்தல்களுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படும் பட்சத்தில் அல்லது பொருந்தாத சந்தர்ப்பங்களில் சிங்கள மொழியிலான அறிவித்தல் மேலோங்கி நிற்கும் என்பதுடன், அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழியிலான அறிவித்தலுக்கு அமைய செயற்படுதல் வேண்டும்.

யூ.வீ. சரத் ரூப்பசிறி,
குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம்,
குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்.

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்,
"சுகுறுபாயா",
ஸ்ரீ சுபூத்திபுர வீதி,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2019 (2020)**

Open Competitive Examination for Recruitment to Grade II of the Post of Authorized Officer – 2019 (2020)

1. மொழி மூலம் (கூட்டினுள் உரிய இலக்கத்தை எழுதுக)

| மொழிமூலம் | இலக்கம் |
|---|---|
| சிங்களம் | 2 |
| தமிழ் | 3 |
| ஆங்கிலம் | 4 |

(பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்துதல் வேண்டும்)

2. பிரத்தியேக தகவல்கள்:

2.1 முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துகளில்): ..........................................................................................................
..........................................................................................................
(உதாரணம்: HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDANA)

2.2 முதலெழுத்துக்களை இறுதியில் குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்): .............
..........................................................................................................
..........................................................................................................
(உதாரணம்: GUNAWARDANA H.M.S.K.)

2.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்): ..........................................................................................................
..........................................................................................................

2.4 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துகளில்): ..........................................................................................................
..........................................................................................................

2.5 பரீட்சை அனுமதி அட்டையை அனுப்ப வேண்டிய முகவரி

(i). (ஆங்கில பெரிய எழுத்துகளில்): ..........................................................................................................
..........................................................................................................

(ii). (சிங்களத்தில்/தமிழில்): ..........................................................................................................
..........................................................................................................

2.6 பால் (கூட்டினுள் உரிய இலக்கத்தை எழுதுக):

ஆண் – 0
பெண் – 1

2.7 இனம் (கூட்டினுள் உரிய இலக்கத்தை எழுதுக):

சிங்களவர் – 1
தமிழர் – 2
இந்தியத் தமிழர் – 3 [ ]
முஸ்லிம் – 4
பிற – 5

2.8 தேசிய ஆள் அடையாள அட்டை இல.: [ | | | | | | | | | | | ]

2.9 கையடக்கத் தொலைபேசி இல.: [ | | | | | | | | | ]

2.10 பிறந்த திகதி:
ஆண்டு: [ | | | ] மாதம்: [ | ] திகதி: [ | ]

2.11 தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டிய இறுதித் திகதியாகிய 2020, ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதிக்கு வயது:
வருடங்கள்: [ | ] மாதங்கள்: [ | ] நாட்கள்: [ | ]

3. கல்வித் தகைமைகள்:

3.1 பட்டம் தொடர்பான தகவல்கள்

i. பட்டம் பெற்ற திகதி : ..............................................................................................
ii. பல்கலைக்கழகம்/கல்வி நிறுவகம் : ..............................................................................................
iii. பதிவிலக்கம் : ..............................................................................................
iv. உள்வாரியா/வெளிவாரியா என்பது : ..............................................................................................
v. பட்டம் : ..............................................................................................
vi. பாடங்கள்/பாடத்துறை : ..............................................................................................
vii. பரீட்சைச் சுட்டெண் : ..............................................................................................
viii. பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலம் : ..............................................................................................

3.2 க.பொ.த. (சா.த.) பரீட்சை

i. சித்தியெய்திய வருடம்: ..............................................................................................................
ii. பரீட்சைச் சுட்டெண்: ..................................................................................................................
iii. பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலம்: .........................................................................................
iv. ஆங்கில மொழிக்குப் பெற்றுக் கொண்ட சித்தி: ...........................................................................

4. உடற் தகைமைகள்:

4.1 உயரம்:
............ அடி, ............ அங்குலம் அல்லது ..................... சென்றி மீற்றர்

4.2 மார்புச் சுற்றளவு (பெண் விண்ணப்பதாரிகளுக்கு ஏற்புடையதாகாது):
............ அடி, ............ அங்குலம் அல்லது ..................... சென்றி மீற்றர்

5. 5.1 ஏதேனும் குற்றவியல் நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா?
................ (ஆம்/இல்லை)

5.2 "ஆம்" எனில் அது தொடர்பான விபரங்களைத் தருக.: ...................................................................................
.........................................................................................................................................................................
.........................................................................................................................................................................

6. 6.1 நீங்கள் ஏற்கனவே அரசாங்க சேவையில் பதவியொன்றை வகிக்கின்றீர்களா?
................ (ஆம்/இல்லை)

6.2 "ஆம்" எனில் அது தொடர்பான விபரங்களைத் தருக.: ......................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................

7. நீங்கள் அரசாங்க சேவையில் பதவியொன்றை வகித்து வந்த வேளை பதவிநீக்கப்பட்ட/பதவி விலகிய ஒருவரா என்பது: ......
..........................................................................................................................................

8. பரீட்சைக் கட்டணம்:

i. செலுத்தப்பட்ட தபால்/உப தபால் அலுவலகம் : ..................................................................................
ii. செலுத்திய தொகை : ..................................................................................
iii. செலுத்திய திகதி : ..................................................................................
iv. பற்றுச்சீட்டு இல. : ..................................................................................

| |
|---|
| பற்றுச்சீட்டின் ஓர் ஓரமாக வேறாகாதவாறு இங்கே ஒட்டவும்<br>பற்றுச்சீட்டின் நிழற் பிரதியொன்றை தம் வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும். |

9. விண்ணப்பதாரியின் உறுதியுரை:

இங்கு என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டியவரை உண்மையானதும் சரியானதுமென உறுதியுரைக்கின்றேன். அத்துடன் பரீட்சை சட்ட திட்டங்களுக்கு ஏற்ப செயற்படுவதற்கும், இப் பரீட்சை தொடர்பான ஏற்பாடுகளுக்கும், நிபந்தனைகளுக்கும் ஏற்ப, நான் இப் பதவிக்கு தகுதியற்றவன் எனத் தெரிய வரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ எனது அபேட்சகத்துவத்தை இரத்துச் செய்வதற்காக எடுக்கப்படுகின்ற தீர்மானத்திற்கும் இணங்குகின்றேன். மேலும், பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்ட திட்டங்களுக்கும் நான் கட்டுப்படுகின்றேன் என்பதையும் உறுதியுரைக்கின்றேன்.

திகதி: .....................................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

10. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் (வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 8.4 இற்கு அமைவாக இருத்தல் வேண்டும்):

இவ் விண்ணப்பத்தை முன்வைக்கும் .................................................................................................................. (முழுப் பெயர்) என்பவரை நான் தனிப்பட்ட முறையில் நன்கு அறிவேன் என்பதையும், இவர் என் முன்னிலையில் 2020 ........... ஆம் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் என்பதையும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்பதையும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

..................................................................................
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்

திகதி :
அத்தாட்சிப்படுத்துபவரின் பெயர் :
பதவி :
முகவரி :
(இறப்பர் முத்திரையை இடவும்)

9-469/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.